திராவிடநாடு

13—12—59 | வார வெளியீடு | விலை 16 காசு

அடைந்தே காட்டுவோம்!

—[வீரா. விநாயகம்]—

தென்னகந் தழைக்கவுந்
தீந்தமிழ் செழிக்கவும்—தூண்டுவோம்
அனைவரையும் வேண்டுவோம்.

இன்னல்கள் எய்திடும்
ஏழைக் குதவிகள்—அளிப்போம்
உளம் களிப்போம்.

உணவினைப் பெருக்கிடும்
உழவர்கள் தம்மொடும்—உழைப்போம்
பயிர் தழைப்போம்.

குணத்தொடு செல்வம்
குறைவறச் சேர்த்துமே—குவிப்போம்
பசி அவிப்போம்.

இல்லற மெங்கும்
இனிதே மகிழ்ந்திட—ஊக்குவோம்
தொழில் ஆக்குவோம்.

கல்வியைப் பெய்திடுங்
கலைக்கூடங் கள்பல—கட்டுவோம்
முரசு கொட்டுவோம்.

சாதியாம் சமய
சண்டையின் பூசலைச் —சாடுவோம்
ஒழித்தே ஆடுவோம்.

ஆதிநல் மக்களின்
அவல இடர்தனை—அழிப்போம்
உடன் ஒழிப்போம்.

அன்பு வளர்ந்துயர்
அறநெறி ஓங்கிட—ஆற்றுவோம்
செயல் ஆற்றுவோம்.

இன்பத் திருவிட
நாட்டினை நம்பால் —ஈட்டுவோம்
அடைந்தே காட்டுவோம்.

புறத்திலே ஒரு துளி!

—[ஆ. வெ. செல்லமுத்து]—

அண்ணாந்து பார்த்தால் அலர் கதிரோனின் தோற்றம். அருகிலே ஓங்கி உயர்ந்த மலைகள். மலைகளில் அடர்ந்தும் படர்ந்தும் வளர்ந் திருக்கும் பசுமரங்கள். யானை, புலி, போன்ற கொடுவிலங்குகள் உறையும் மலைத் தொடர்கள். மலையடி வாரத்தில் சலசலக்கும் ஓர் சிற்றருவி. சிற்றருவிக்கரையின் மருங்குதனில் ஓர்குடில். குடிலின் முன்புறம் முற்றம். முற்றத்திலே தளிர் இலைகளோடு காட்சிதரும் ஓர் ஒற்றைப் பலாமரம். அப்பழ மரத்தின்மீது முன்னைக்கொடிகளும் முசுண்டைக்கொடிகளும் படர்ந் துள்ளன. குடிலின் முற்றத்தில் பந்தர்கிடையாது. பந்தருக்குப் பந்தராக நிழல்செய்து விளங்கியது அப்பலாமரம்.

குடிலின் உட்புறத்தில் வீட்டுத் தலைவி தன்கடமைகளில் ஈடுபட் டிருந்தாள். அவளின் கணவன் ஓர் வேட்டுவத் தலைவன். அருகி லிருந்த மலைகளில் யானைவேட்டை ஆடும் பொருட்டு அவன் சென்றி ருந்தான்.

வேட்டையாடி முடிந்ததும் தன் குடிலைநோக்கிப் புறப்பட்டான் அவ் வேட்டுவ மன்னன். தன் குடிலை நெருங்கும் போழ்தில் அவனுக்கு மிகவும் களைப்பாயிருந்தது. அதனால் குடிலின் முற்றத்திலிருந்த பலாவின் நிழலில் அமர்ந்தான். தன் வீட்டைவிட்டு அதிகாலையில் புறப்பட்டுச் சென்றவன் அவன். வேட்டையாடும்போது ஏற்பட்ட சோர்வாலும், செங்கதிரோனின் வெம்மையாலும் சோர்வுற்றிருந்த அத்தலைவன், சிறிது நேரத்தில் பலா மரத்தின் தண்ணிழலில் தூங்கிவிட்டான்.

அருவிக் கரைகளிலிருந்த பசும் புற்களை இரு மான்கள் மேய்ந்து கொண்டிருந்தன. அவைகளில் ஒன்று கலைமான். மற்றொன்று அக்கலை மானின் பிணை (பெண் மான்) வேட்டுவர்கட்குச் சிக்காமல், அடர்ந்த புதர்களைத்தாண்டி ஓடி வந்த காரணத்தால் ஏற்பட்ட சோர்வு அப்போதுதான் நீங்கி யிருந்தது அப்பிணைக்கு. கலை மானுக்கோ, தன் பிணைமேல் மிகுந்த காதல். குறிப்பறிந்த அப் பெண்மான் குடிலின் முற்றத்தி லிருந்த பலாமரத்தை நோக்கிச் சென்றது. அதைப் பின் தொடர்ந் தது கலை.

வீட்டு வேலைகளை முடித்த வேட்டுவனின்மனைவி குடிலைவிட்டு வெளியில்வந்தாள். வந்தவள் அப் படியே நின்றுவிட்டாள்! தன் கண வன் வேட்டை முடிந்து திரும்பி வந்துவிட்டதை அறிந்த அவ ளுக்கு மிக்க மகிழ்ச்சி. மகிழ்ச்சி யால் துள்ளிக்கொண்டு கணவ னிடம் செல்லலாம் என்று வந்த அவள் திடீரென நின்றுவிட்டாள். காரணம்?

பந்தலின் ஒரு புறத்தில் அவ ளின் கணவன் உறங்கிக்கொண்டி ருந்தான். மற்றொரு புறத்தில் அவள் கண்டதோ இரு மான்களை யும். கலைமான் தன் நாக்கால் பிணையை நக்கிற்று. இரண்டும் மகிழ்வோடு இன்பம் திளைத்துக் கொண்டிருந்தன. தன் இல்லான் உறங்குவதையும் மான்களின் கூடலையும் கண்டதால்தான் அம் மனையாள் சிலையென நின்று விட்டாள்.

தான் ஓசைபட நடந்தால், மான்கள் இரண்டும் தங்கள் இன்ப நிலையைவிட்டுப் பிரிந்து ஓடநேரி டும். அப்படி ஓடும்போது எழும் ஓசையால் பந்தரின் மறுபுறம் உறங்கும் தன் கணவனும் தூக்கத் தினின்றும் எழ நேரிட்டுவிடுமே என்ற அச்சத்தால் அப்படியே நின்றுவிட்டாள் அம் மனையாள்.

இத்தகு நற்காட்சியை வீரை வெளியனார் என்ற புலவர் எந்த இடத்திலிருந்து நோக்கினாரோ நமக்குத் தெரியாது. ஒருவேளை அவர் தம் மனக்கண்களால் மேற் கூறிய எழிற்காட்சியைக் கண்டி ருப்பார் போலும்! அக்காட்சியை மற்றவர் பார்க்காவிடினும் படித் தாவது மகிழட்டும் என்று எண் ணிய அவர், அதனை ஓர் கவிதை வடிவில் நமக்கு அளித்துப்போந் தார். இதோ அத்தீந்தமிழ்க் கவிதை:-

"முன்றில் முன்னையொடு முசுண்டைபம்பிப்
பந்தர்வேண்டாப் பலாத்தூங்கு நீழல்
கைம்மான் வேட்டுவன்
கனைதுயில்மடிந்தெனப்
பார்வைமடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழில் தனிக்கலை திளைத்துவிளையாட
இன்புறு புணர்நிலை கண்டமனையோள்
கணவன்எழுதலும் அஞ்சிக் கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சியாவதும்
இல்வழங் காமையின் கல்லெனஒலித்து
........................."

புறம் 320.

மேற் கூறிய பாடல் புறநானூற் றின்கண் அமைந்துள்ளது அப் பாடல் நமக்கு அளிக்கும் இன்பம் ஒரு துளி! எஞ்சிய துளிகளையும் படித்துப் பருகுவது நம்கடமை!

★

காஞ்சியில்

தி. மா. மு. கழக அமைப்பு

மாணவத் தோழர்களின் விருப் பமும் முயற்சியும் காஞ்சிபுரத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அமைக்கும் ஒரு நல்ல சூழ் நிலையை உண்டாக்கி, அதன் அமைப்புக் கூட்டத்தை 13-12-59ல் 'திராவிட நாடு' நிலையத்தில் நடத்த எண்ணியிருப்பதால், அன்பர்கள் கலந்துகொண்டு ஆக்கமும் ஊக்க மும் தந்து மேற்படி முயற்சியைத் திருவினையாக்க வேண்டுகிறேன்.

இரா. வெங்கடேசன்,
செயலாளர், நகர தி. மு. க.

சொல் செயலாகவேண்டும்

18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (13–12–59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 22

"மாநில அரசுகளுக்கு அதிகாரம் இல்லை; டெல்லி ஆட்டுவிக்கின்றபடி ஆடிடும் பாவைகளாக அவை இயங்குகின்றன" என்று நாம் சொன்னபோது பலர் இந்தக் கூற்றைக் 'கூச்சல்' என்று எள்ளி நகையாடினர். பேதம் பேசுகின்றவர்கள், பிளவு மனப்பான்மை கொண்டவர்கள் என்றெல்லாம் வாய்கூசாது சொல்லியமைந்தனர். அவர்கள் தூற்றுகின்றார்களே என்பதற்காக நாம் துவண்டுவிடவில்லை; தொடங்கிய பணியைத் தள்ளிப்போடவும் இல்லை.

நமது கருத்தை, நல்ல சான்றுகளோடும் உறுதியோடும் சொன்னோம்; சொல்லுகின்றோம். நாட்டு நடப்புகள் நமது கூற்று உண்மைதான் என்பதைச் சொல்லின. "இப்படியும் இருக்குமோ" என்று ஐயுற்ற மக்கள் ஐயம் தெளிந்து, உண்மை உணர்ந்து நம்பிக்கை பெற்றனர். நம்முடைய வளர்ச்சிக்கு இந்த நம்பிக்கை பெரிய காரணமாக அமைந்திருக்கிறது.

இன்று இந்தக் குரல் கேட்காத இடம் இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு இது பரவியிருக்கிறது. கட்சிகளில் ஈடுபட்டிருப்போர், கட்சிகளில் இல்லாமல் தனித்திருப்போர், தொழில்துறையில் தொண்டாற்றுவோர் ஆகிய எவரும், இந்தக் கருத்தினைச் சொல்லக் கேட்கின்றோம்.

சில நாட்களுக்கு முன் சென்னைக் கல்லூரி ஒன்றில் பேசும்போது முன்னாள் ஆளுநரும், பழுத்த காங்கிரசுக்காரருமான திரு. க. சந்தானம் அவர்கள், மாநிலங்களின் உரிமை என்பது வெறும் சொல் அளவுக்குத்தான் உள்ளது; என்ற பொருளில் பேசியுள்ளார்.

அண்மையில் ஆந்திர முதலமைச்சர் திரு. சஞ்சீவி அவர்கள் இதைப்பற்றிச் சொன்ன சொற்களை நாடு அறியும். நம் கழக உறுப்பினர் பேசுவதுபோன்றே அவர் கூற்று அமைந்திருந்ததைக் கண்டு திகைத்தவர் பலர். அவர் பெற்றுள்ள "உயர்வும்" அந்தத் திகைப்பு டில்லியினருக்கும் ஏற்பட்டதுதான் காரணம் என்கின்றனர்.

இப்படி, நாள்தோறும், பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருப்போர் இந்த உண்மையினை உணர்ந்து உரைக்கும்போது நாம் புதிய வலிவைப் பெறுகின்றோம். நமது பணியை நாடு அறியும் காலம் விரைந்து வருகிறது என்ற நம்பிக்கை பிறக்கிறது.

இந்த நம்பிக்கையைப் பெருக்கும் வகையில் இக்கிழமை மேலும் சிலர், இவ்வுண்மைகளை எடுத்துப் பேசியுள்ளனர்.

சென்னை சட்டமன்றத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒட்டிப் பேசும்போது செட்டிநாட்டு அரசர் சர். முத்தையா அவர்கள் டெல்லியோடு பிணங்கியாவது சில உரிமைகளைப் பெறுங்கள்—என்று அமைச்சர்களுக்கு 'தைரியம்' கூறுகின்றார். ஏதாவது சாக்குச் சொல்லிப் போக்குக் காட்டி மூன்றாவது திட்டத்திலும் ஏமாற்றிவிடப் போகிறார்கள், விழிப்பாக இருந்து வேண்டியதைப் பெறவேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கிறார்.

திரு. ஓ. பி. இராமசாமி அவர்கள்--இந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர்—காங்கிரசுக்காரர். டாக்டர் ஏ. இலக்குமணசாமி அவர்கள் நமது பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர். கற்றறிந்தவர் என்று போற்றப்படுபவர். எதிலும் எளிதில் ஈடுபட்டுவிடமாட்டார், சொல்லின்பொருள் தெரிந்தே சொல்லுவார். இந்த இருபெரும் தலைவர்களும் மேல் சபையில் பேசும்போது மத்திய சர்க்காரின் தலையீட்டால்தான் நாட்டின் நலன் கெடுகிறது என்று சொல்லியுள்ளனர். உணவுப்பொருள் விலை ஏற்றத்திற்கும் நியாயமற்ற அந்தத் தலையீடே காரணம் எனக் கண்டித்திருக்கின்றனர்.

சுதந்திரக் கட்சியினரும், டெல்லியின் வளர்ந்து வரும் அதிகார வெறியைக் கண்டிக்கின்றனர்.

நாம் எழுப்பிய இந்தக் குரல் எங்கும் கேட்கிறது. சூழ்ந்திருக்கும் மலைமுகடுகளிடையே ஒலி எதிரொலியாவதுபோல, இந்தக் குரல் எங்கெங்கோ, எட்டியிருக்கிறது. எவரெவர் உள்ளத்தையெல்லாமோ தொட்டிருக்கிறது. இது நமக்குப் பெருமை தருவதுதான். ஆனால் இந்தப் பெருமை ஒன்றே போதுமா?

சொல் செயலாக வேண்டாமா? "கயிறு கழுத்தை இறுக்குகிறது, மூச்சு முட்டுகிறது" என்று உணருவதோடு நின்றால் பயனில்லை. எல்லோரும் இணைந்து நின்று செயல்படவேண்டும். மூடியிருக்கும் கதவை, நெஞ்சத்தைத் திறக்க முயலல் வேண்டும்.

இந்தத் தீமைக்கு உள்ள ஒரே மாற்று தனிநாடு பெறுவது என்பது நம்முடைய கொள்கை; வேட்கை; இலட்சியம். ஆனால் 'பெரியவர்கள்' இந்த மருந்து கசக்கின்றது. என்று சொல்லக்கூடும். அவர்களுக்காக இனிப்பு சேர்த்த மருந்துதான் 'மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பெறவேண்டும்' என்பது! ஏதாவது ஒரு மருந்தை உண்டுதான் நோயைத் தணிக்க வேண்டும்.

இல்லையேல் நோய் தணிவதற்கு வழியே இல்லை. வடக்கு வாழ்ந்துகொண்டுதான் இருக்கும்; தெற்குத் தேய்ந்துகொண்டுதான் இருக்கும்.

டெல்லியின் இரும்புப் பிடியை உணரும் பெருமக்கள் அந்தப் பிடி தளர என்னவழி என்பதையும் ஆராய்ந்து செயல்படவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மத்திய அரசின் பிடியில் தென்னகம் சிக்கியிருக்கும் வரையில், நாம் எந்தவித நன்மைகளையும் அடைய முடியாதென்பதை விளக்க நாம் எந்தெந்தக் காரணங்களை எடுத்துக்காட்டி வந்தோமோ, அவற்றுள் ஒன்றுதான் டெல்லியில் அதிகாரங்களைக் குவித்துவைக்திருப்பதும். இந்த அதிகாரக் குவியலில் ஒரு பகுதியைக் குறைத்துவிடுவதாலேயே நம்முடைய எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ந்துவிடுமென்பதல்ல. என்றபோதிலும், டெல்லியின் பிடிப்பிலிருந்து விடுபடுவதற்குள்ள வழிகளுள் இதுவும் ஒன்று என்பதால், இதனை நாம் வரவேற்கிறோம்.

அதிகாரங்கள் குறையக் குறைய ஆதிக்கப் போக்கின் அளவிலும்—தரத்திலும்—நடப்பிலும் குறைவும் பணிவும் தளர்வும் ஏற்படும். இப்போதுள்ள 'மிடுக்கு' இருக்காது. உரத்த குரலில், மிருதுத் தன்மை தோன்றும். ஆங்கிலத்திலுள்ள ஆகாச் சொற்கள் நாவை அண்ட அஞ்சும். மிஞ்சிப் பேசுவதோ மிரட்டி அடக்க நினைப்பதோ யோசிக்க வேண்டியவையாகும். எனவே, பெரியவர்கள்—நல்லவர்கள் சொல்லின் தரம் செயலில் உயர்ந்து காண உழைகக முன்வரவேண்டும்.

★

"திராவிட நாடு" ★ ★ ★ ★ ★ ★

பொங்கல் மலர்

சி. என். ஏ. தரும்

கருத்துப் படையல்கள், கட்டுரைகள், கதைகள்

ஆகியவற்றுடன்

வண்ண முகப்பும், எண்ணத் தொகுப்பும்

கொண்டதாக

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும். விலை ரூ. 1-00

மதுரையில்
மாணவர் முழக்கம்

நமது தனி நிருபர்

மதுரைமாநகரில், சங்கத் தமிழ் வ்ளர்ந்த அந்த மூதூரில், சிங்க ஏறனையர் சிறப்பானதோர் மாநாடு நடத்தி, தமிழக மாணவரனைவருக்கும் வழிகாட்டிகளாகத் திகழ்ந்திருக்கின்றனர்.

நவம்பர் 29-ஞாயிறன்று மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அவர்களால்.

எத்தனையோ எதிர்ப்புகள்—ஏராளமான தொல்லைகள்! இத்தனையும் தாங்கிக்கொண்டு அவர்கள் செய்திருந்த ஏற்பாடுகள், அவர்தம் உள்ளத்திலே வழிந்தோடுகின்ற ஆர்வத்தினுக்கும், எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சிடாத தன்மைக்கும் நல்ல எடுத்துக்காட்டுகளாகத் திகழ்ந்தன.

மாநாட்டிற்கு முதல் நாள் — சனிக்கிழமையன்று — பெருமழை! மதுரைமாநகரின் தெருவெங்கும் நீர்ப்பெருக்கு! மாநாடு நடைபெறவிருந்த இடமோ திறந்தவெளி—கொட்டகை போட்டாகவேண்டும். எனவே மாநாடு நடைபெறுமா என்ற ஐயப்பாடே எழுந்தது பலரது உள்ளங்களில்!

எனினும் மாநாட்டுப் பொறுப்பாளர்கள், 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?' என்று அடிக்கடி கேட்பார்களே, அதனை நிரூபிப்பதைப்போல், கொட்டும் மழையில் கொட்டகை போடுகின்ற பணியிலும், ஓடியாடி நன்கொடை வசூலிக்கின்றமுயற்சியிலும்மிகமும்முரமாக ஈடுபட்டிருந்தனர். மாநாடு எப்படியும் நடைபெற்றாகவேண்டுமென்று அவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கொழுந்துவிட்டெரிந்த ஆர்வத்தை, தெள்ளத்தெளியக் காட்டின அவர்தம் செய்கை, சலியாத உழைப்பு!

அவர்தம் உழைப்பினுக்கும் ஆர்வத்திற்கும் பெருமதிப்பு அளித்திடுவதைப்போல், ஞாயிறன்று இயற்கையின் ஒத்துழைப்பு இருந்தது — அன்று காலை மழையின் அறிகுறியே இல்லை!

எனவே காலை ஏறக்குறைய 10-மணி அளவில், **மதுரை சந்தைப் பேட்டை ஏ. வி. எஸ். எஸ். ரைஸ்மில் காம்பவுண்டில்**மதுரைமாவட்டத்திராவிட மாணவர் முன்னேற்றக்கழக முதல் மாநாடு துவக்கப்பட்டது.

மாநாட்டிற்கு மதுரையின் கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் திரளாக வந்திருந்தனர்.

துவக்கத்தில் வரவேற்புக்குழுத் தலைவர் **திரு. கு. இந்திரசித்து** அவர்கள் அனைவரையும் வரவேற்றுஉரை நிகழ்த்தினர்.

"சேரன் செங்குட்டுவனின் வீர வரலாறும் — பாண்டி மன்னர்கள் பகைப்புலம் வென்றதும் — அன்றைய தமிழர்தம் சீரும் சிறப்பும்—நமது அகக்கண்களைத் திறந்தாக வேண்டும் —அந்தகாரத்திலிருந்து நம்மை மீட்டாகவேண்டும். அதற்கு மாணவருலகத்தின் மகத்தான உழைப்பு மிகமிகத் தேவை" என்ருர் அவர்.

மாநாட்டைத் துவக்கிவைத்து உரையாற்றியதிரு.P.S **மணியம்** B.A. அவர்கள், காங்கிரசும் மற்றபல கட்சிகளும், மாணவர்களைத் தம்பால் ஈர்த்திட முயன்று, தோல்வியுற்றிருக்கின்ற காரணத்தால், மாணவர்கள் தி. மு. கழகத்தின் மீது அக்கறையும் அன்பும் செலுத்துவதை அவர்கள் விரும்பவில்லை. எனவே மாணவருலகத்தையும், தி. மு. கழகத்தையும் ஒருசேரச் சாடுவதிலே அவர்கள் ஈடுபட்டிருக்கின்ருர்கள் எனருர்.

அடுத்து, மாநாட்டுத் தலைவரை முன்மொழிந்து, மாநாட்டுச்செயலாளர்களில் ஒருவரான **திரு. கோ. வெற்றிவேந்தன்** அவர்கள் உரையாற்றினர்.

திருவாளர்கள் **காமராஜ் கோ. சாமி, ப. நெடுமாறன், கோவை செழியன், பி. ஏ. டி. கே. பொன்வேல், பி. ஏ. என். வி. என். சோமு** ஆகியோர் வழிமொழிந்து பேசினர்.

தலைமையுரையாற்றிய திரு. **கே. ஏ. கிருட்டினசாமி, பி. ஏ. (ஆனர்ஸ்)** அவர்கள், ஆகஸ்டுப் போராட்டத்திலும் அதற்குப் பின்னரும், காங்கிரசுக் கட்சி மாணவர்களைத் தம்மால் இயன்ற அளவு பயன் படுத்திக் கொண்டனர்என்றும், கேரளத்திலே கம்யூனிஸ்டு ஆட்சிக்கெதிராக நடத்தப்பட்ட போராட்டங்களிலே மாணவர்கள் காங்கிரசாலும் மற்றும் பல கட்சிகளாலும் சூதாட்டக் காய்களாகப் பயன்படுத்தப்பட்டனர் என்பதையும், விளக்கமாகக் கூறினர். இதற்கு மாருக, தி. மு. கழகம் எந்தப் போராட்டத்திலும் மாணவர்களை ஈடுபடுத்தியதில்லை, இனியும் ஈடுபடுத்தப்போவதில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறினர்.

அடுத்துப் பேசிய திரு. **இராஜகுமார் பீடர்** அவர்கள் இந்தியா ஒரு நாடு அல்ல, பல இன மக்களைக் கொண்ட துணைக்கண்டம் என்பதை ஆதாரத்தோடு விளக்கி, திராவிடம் தனித்து வாழவேண்டுமென்று தி. மு. கழகம் கூறிவருவதிலே தவறொன்றுமில்லை என்ருர்.

"தி. மு. கழகத்தின் தாய்க்கழகமாம் திராவிடக் கழகம், அன்றொருநாள், இதே மதுரையில் மாநாடு நடத்த முயன்றபோது ஏற்பட்ட தொந்தரவுகள் ஏராளம். நமது இயக்கத்தவர், அன்றுபட்ட அல்லல்கள் பல — அது ஒரு சோக வரலாறு. மாநாட்டுப் பந்தலே கொளுத்தப்பட்டது! அதே நகரில், கழகத்து மாநாடுகூட அல்ல,

கழகத்தின் பால் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற மாணவர் கழக மாநாடு இந்த அளவு சிறப்பான முறையில் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது என்பது மட்டுமல்ல—கழகத்தின் கொள்கைகள் எவ்வளவு வேகமாக இந்த நாட்டு மக்கள் உள்ளங்களிலே வேரூன்றி வருகின்றன என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு'' என்றார், திரு. **எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.** அவர்கள்.

அடுத்துப் பேசிய திரு. **தங்க பாண்டியன்** அவர்கள், மாணவர் கழகம், தி. மு. கழகத்திற்கும் நாட்டிற்கும் பயன்படக்கூடிய வகையில் செயல்படுவது எப்படி என்பது பற்றிப் பேசினார்.

பண்டித நேரு அவர்கள் காந்தியாரின் உண்மையான வாரிசல்ல—காந்தியாரின் கொள்கைகட்குள் முக்கியமானதென அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற அகிம்சா தத்துவம் உள்நாட்டுப் பிரச்சினைகள் பொறுத்தவரையில், நேரு பண்டிதரின் தலைமையில் இயங்கி வருகிற ஆட்சியினரால் பின்பற்றப்படுவதில்லை—என்றார் திரு. **இ. கிருஷ்ணன்** அவர்கள்.

போருக்குச் செல்லும் வீரனுக்கு வில், வாள், வேல் முதலான ஆயுதங்களோடு, கவசமும் பயன் படுவதைப்போல், மாணவர் கழகம் தி. மு. கழகத்திற்கு, நல்லதோர் கவசமாகப் பயன்படமுடியும்—மாற்றார்தம் தூற்றல் பாணங்களால் கழகம் அழிந்துபடாதெனினும், அவர்தம் குற்றச்சாடுகட்குப் பதில் சொல்லுகின்ற இயக்கமாகத் தி. மா. மு. கழகம் இயங்க முடியும், என்றார் திரு. **அழகிரிசாமி** அவர்கள்.

சமுதாயத்திலே உள்ள சாதி பேதம் போன்ற தீய சக்திகளை அகற்றும் பணியில் மாணவர் கழகம் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும், என்று உரைத்தார் திரு. **அ. பாலு** அவர்கள்.

அடுத்து, திரு. **இளவழகன்** அவர்கள், ''இலக்கியத்தில் தமிழர்கள்'' என்னும் பொருள்பற்றிப் பேசினார்.

டில்லி ஏகாதிபத்தியம் இந்தியை மெள்ள மெள்ள நம்மீது திணித்து வருகின்ற போக்கைக் கண்டித்து—அந்தப் போக்கினை எதிர்த்து மாணவர்கள் தம்மால் இயன்ற அளவு, தமக்கென வகுக்கப்பட்டிருக்கின்ற வரையறைக்குள்ளிருந்து போராடவேண்டும் என்று அறை கூவல் விடுத்தார் திரு. **என்.வி.என். சோமு** அவர்கள்.

தி. மு. கழகம் ஒரு விடுதலை இயக்கம், எனவேதான் இதன்பால் மாணவர்களும் பொதுமக்களும் பெருவாரியாக ஈர்க்கப்படுகின்றார்கள், இதைக்கண்டு மாற்றுக்கட்சியினர் பொருமைப்படுவதிலே வியப்பில்லை, அதே சமயத்தில் அவர்கள் தொடுக்கின்ற ஏசல் கணைகளுக்கு நாம் பதில் சொல்லவும் தேவையில்லை, என்றார் திரு. **டி.கே. கோபால கிருஷ்ணன், பி. ஏ.,** அவர்கள்.

அடுத்துப் பேசிய திரு. **பி. பால சுப்பிரமணியன், பி. ஏ.,** அவர்கள் மாணவர் கழகத்தின் பணிகளை விளக்கினார்.

மதுரை திரு. **மா. பாண்டியன்** அவர்கள், ''மதுரையில் உள்ள 'திராவிடநாடு பாலிடெக்னிக்'கை 'தமிழ்நாடு பாலிடெக்னிக்' என்று மாற்றினார்கள். அதற்குக் காரணம் தமிழ்ப்பற்று என்றும் கூறினார்கள். ஆனால் அங்ஙனம் கூறிய ஆட்சியாளர்களுக்கு உண்மையிலேயே தமிழ்ப்பற்று இருக்குமானால், இன்னமும் ஏன் இந்த மாநிலத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடவில்லை?'' என்று கேட்டார்.

வள்ளுவரின் அரசியல் கொள்கைகள் பலவற்றைத் தெளிவாக எடுத்துரைத்தார் திரு. **ச. பெ. மலைச்சாமி** அவர்கள்.

''அமைச்சர்கள் நேரிடையாகவோ மறைமுகமாகவோ தேர்தல்களில் தலையிடுவது பெரிய குற்றம் எனக் குறிப்பிடுகிறது. இங்கிலாந்து நாட்டில் 1779ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான், இந்த ஆட்சிமுறை அமைக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள். ஆனால், அண்மையிலே நடைபெற்ற சிதம்பரம் இடைத் தேர்தலில், நமது அமைச்சர்கள் ஒருவர் தவறாமல் தலையிட்டு, தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்களே, அது எப்படி நியாயமாகும்? எப்படிச் சட்டவரம்பிற்கு உட்பட்டதாக ஆகும்?'' என்று கேள்வி எழுப்பினார் திரு. **டி. கே. பொன்வேல், பி. ஏ.** அவர்கள்.

அடுத்துப் பேசிய திரு. **கோவை செழியன், பி. ஏ.** அவர்கள், மாணவர்கள் விடுதலை இயக்கங்களிலே பெற்று வந்திருக்கிற பங்கினை, வரலாற்று ஆதாரத்தோடு எடுத்துக்காட்டி, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் திராவிடத்தின் விடுதலைப் பணிக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதிலே வியப்பில்லை — அதைக்கண்டு பொருமைப்படுபவர்கள் படட்டும்—நம்மைத் தூற்றுபவர்கள் தூற்றட்டும்—நாம் அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை—என்றார்.

கடைசியாக, தி. மா. மு. க. பொதுச்செயலாளர் திரு. **எஸ். டி. சோமசுந்தரம்** அவர்கள் மாணவர் கழகம் நாட்டுக்கு ஆற்றவேண்டிய பணிகள் பலவற்றை விளக்கினார். தென்னகத்தின் மற்ற மாநிலங்களில் தி. மு. கழகம் விரைவில் வளருவதற்கு, மாணவர் கழகம் சிறந்ததோர் சாதனம் என்றார். நமக்குரிய எல்லைக் கோட்டைத் தாண்டாமல், நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் நம்மால் இயன்றவற்றைச் செய்தாகவேண்டும் என்று குறிப்பிட்டார். வரவேற்புக் குழுத் தலைவர் நன்றி கூறலோடு மாநாடு முடிவுற்றது.

மாநாட்டில், மாணவர் பிரச்சினைகள்பற்றிச் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களின் பேரில் தோழர்கள் **பாலு, மணிவண்ணன், கோ. சாமி, கொ. வெற்றி வேந்தன், வெற்றிச்செழியன், விருதை அமுதன், புகழ்மணி, தொண்டைமான், விருதை. சீனிவாசன், செண்பகம், தவசி,** ஆகியோர் பேசினர்.

நாவலர் நெடுஞ்செழியன், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

இத்தகைய சிறப்பானதோர் மாநாட்டை நடத்தி, மதுரைமா நகரின் வரலாற்றில் ஒரு சிறப்பான கட்டத்தை அமைத்துத் தந்த வரவேற்புக் குழுவினரும் — அவர்களோடு ஒத்துழைத்து நல்ல பல யோசனைகள் தந்து உதவிய மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் திரு. எஸ். முத்து அவர்களும் — பாராட்டுதற்குரியவர்கள். அவர்தம் ஆர்வம் பெருகுக! பணிகள் மிகுக!

★

பகடை

சுரந்தை-கணேசன்

"ஆயிரமாயிரம் கேள்விகள் ஏதற்கு? அறுதியிட்டுக் கூறிவிடுகிறேன், வீணாவதியைத் தவிரவேறு எவரையும் என்னால் மணக்க முடியாது." என்றான் அழுத்தந்திருத்தமாகத் தாமரைக்கண்ணன். செரல் நடையிலே போர் வீரனின் தீரம் நடமாடியது. எண்ணத்தின் எழுச்சியாகவே வார்த்தைகளைக் கொட்டினான். அவன் நெஞ்சிலே கொண்டிருக்கும் உறுதி நன்றாக நிழலாடியது.

"எதையும் எடுத்தோம் தொடுத்தோம் என்று போட்டுவிடாதே; இது விளையாட்டு அல்ல வாழவு" என்றார் பெரியவர்.

அருகிலிருந்த தாயின் கண்களிலே கண்ணீர் கரை புரண்டு கொண்டிருந்தது. அதைப் பார்க்கச் சகிக்காமலோ, அல்லது எந்தக் கண்ணீருக்குக் கட்டுப்படாத மனமும் தாயின் கண்ணீருக்குக் கட்டுப்பட்டுவிடும் என்ற எண்ணத்தாலோ என்னவோ, தாயின் பின்புறமாகத் திரும்பியிருந்தவாறே நின்றுகொண்டு பேசிக் கொண்டிருந்தான் தாமரைக்கண்ணன்.

"அதனால்தான் தாத்தா! சொல்கிறேன், இது என் வாழ்வு. நானாக நன்கு சிந்தித்துத் தேடிக்கொண்டது. இதிலே பிறர் தீண்ட வேண்டாம் என்கிறேன்" என்றான் திடமாக.

"உன் இறுதி முடிவு இது தானா?" பெரியவரின் கேள்விக் குறி இறுதி எல்லையில்போய் நின்று விடைக்காகத் தவித்தது.

"இறுதியும் முதலும் எனக்கு ஒன்றுதான். விடையும் ஒன்று தான். என் வாழ்க்கை வீணையை மீட்ட வீணா ஒருவளுக்குத்தான் உரிமை உண்டு" என்று கூறியவாறு பதிலுக்குக் காத்திராமல் விர்ரெனக் கிளம்பினான்.

"அப்படியானால் நாங்கள் சொன்னபடி 'செட்டில்மெண்ட்' எழுதிவிடலாமா" என்றார் பெரியவர்.

நடந்த வேகத்திலேயே "அப்படியே" என்று கூறிப் போய்விட்டான். கடைசி அணுகுண்டும் புஸ்வாணமாகிவிட்ட அதிர்ச்சியிலே அயர்ந்து அப்படியே உட்கார்ந்து விட்டார் பெரியவர்.

சற்றுநேரம் பெரியவரிடமும், தாமரையின் தாயிடமும் மயான அமைதி நிழலாடியது. தன் கண்களிலிருந்து வடியும் கண்ணின் முத்துக்களுக்கு விலை கொடுக்கத் தன் மகன் தயாராய் இல்லை என்பதை முற்றும்உணர்ந்தவுடன்பேச இருந்த சக்தியும் இழந்தவர்களாய் ஆகிவிட்டார்கள் அவர்கள். நீண்ட அமைதிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமே என்ற நிலையில் பெரியவர் அமைதிக் குளத்திலே கல்லிட்டார்.

"என்னம்மா செய்வது? சாமபேத தான தண்டம் எல்லாம் ஆயிற்று; வேறு வழி இல்லையே" என்றார்.

"அதற்காக அந்தச் சிறுக்கியை என் வீட்டில் அனுமதிக்க முடியுமா?" கேள்வியிலே ஆவேசம் துள்ளி விளையாடியது. உறங்கிக் கொண்டிருந்த நாகத்தை உசுப்பி விட்டதுபோலச் சீறினார்கள்.

"என்னம்மா செய்வது? யாராவது ஒருவர் விட்டுக்கொடுத்தால் தானே நல்லது" என்றார் பெரியவர் அமைதியாக.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரி தான். ஊர் பேர் தெரியாதவளை வீட்டில் மருமகளாக வைத்துக் கொண்டால் நாளைக்கு ஊர் நம்மைப் பார்த்துச் சிரிக்குமே! அதற்கு என்னப்பா செய்றது" என்றார்கள் தாய். முன்னை வேகம் இப்பொழுது இல்லை. இருந்தாலும் அழுத்தம் இருந்தது.

"என்னமோம்மா, அந்தப் பொண்ணும் நீ ஆஸ்பத்திரியிலே இருக்கையிலே உனக்குத்தான் மருத்துவம் பார்த்துதுன்னு சொல்றே, உனக்காக ரொம்பக் கஷ்டப்பட்டதுன்னும் சொல்றே! அப்படி இருக்கப்பொ நல்ல பெண்ணாத்தானிருக்கணும். அதிலும் பிள்ளையோ ஒருத்தன்தான் இருக்கான்" என்றார் பெரியவர்.

"ஒருத்தன இருக்கிறதனாலேதான் இவ்வளவும் பார்க்க வேண்டியிருக்கு. இல்லாட்டி ஒன்னு எக்கேடா்வது கெட்டுப்போகுது, மத்தது இருக்குன்னு இருக்கலாம். அதிலேயும் அப்ப அவ என்னிடத்திலே ரொம்ப நல்லா நடந்துகிட்ட காரணம் இப்பதானே புரியுது. அவனை மயக்கினது பத்தாதுன்னு, என்னையும் மயக்கப் பார்த்திருக்கா......" கண்ணியிலே சிக்காது தப்பி வந்த மானைப்போல அவர்கள் காட்சியளித்தார்கள்.

"என்னமோம்மா, பார்த்துச்செய்; அவசரப்பட்டுத் தாழியை உடைச்சிடாதே, நான் வர்றேன். நானும் தனியாகப் பார்த்துச் சொல்றேன்" ஏன்று கூறி விடை பெற்றுச் சென்றுவிட்டார் பெரியவர்.

தாமரையின் தாய்க்கோ, தாமரை வீணாவதி இவர்களின் திருமணத்தை எப்பாடுபட்டாவது நிறுத்தியாகவேண்டும் என்ற தீவிரம் நேரத்திற்கு நேரம் அதிகப்பட்டுக்கொண்டிருந்ததே தவிர, குறைவதாக இல்லை. வீணாவதியை வீட்டிற்குள் அனுமதிப்பது என்பது ஏதோ அருவருக்கத் தக்க ஒரு பிராணியை வீட்டிற்குள் அனுமதிப்பதுபோல அவர்களுக்குப்பட்டது. குலமறியாத இந்தத் திருமணத்தினால் தனக்கு வருகிற பாதகங்களைப்பற்றிய கற்பனை தாமரையின் தாயை நிலைகுலையச்செய்தது. மனிதமனத்திலே இதுபோன்ற கொடிய எண்ணங்கள் தீண்டிவிட்டால் தாமரையின் தாயென்ன! எவராலுமே அதைத் தாங்கமுடிவதில்லை.

வெகுநேரம் வரையில் அமைதியாகவே அமர்ந்திருந்த அவர்கள், ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்த

வர்களாக வீட்டைவிட்டு வெளியேறினார்கள்.

* * *

தாமரைக்கண்ணன் உள்ளே சென்றதும் செல்லாததுமாக' டாக்டர், "வாப்பா...வா...! இப்பொழுதுதான் உன் தாயார் வந்து சென்றார்கள்" என்றார்.

தாமரைக்கண்ணனின் மனத்தில் ஏதோ ஒரு எதிர்பாராத தாக்குதல் ஏற்பட்டுக் கணநேரத்தில் நிலைகுலையச் செய்தது. மெல்லச் சமாளித்தவனாக, "என்ன..." என்று துவங்குமுன் டாக்டர் மேலும் பேசினார்.

"எல்லாம் சொன்னார்கள்" என்றார்.

"எல்லாம் என்றால்" தாமரை கேட்டான்.

"அதான்' உன் காதல் விவகாரம்"

"தெரிகிறது, என்ன சொன்னார்கள்?" என்றான்.

"என்ன சொல்வது? ஒரே பிடிவாதமாக இருக்கிறான் என்று சொன்னார்கள். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன்" என்றார். டாக்டரின் முகத்திலே புன்னகை நடமாடியது. தாமரைக்கோ அப்புன்னகையின் பொருள், புரியாத பெரும்புதிராகி விட்டது. தன்மீது டாக்டருக்குப் பரிவிருக்கிறதா, பகையிருக்கிறதா என்பதையே அவனால் அறியமுடியவில்லை. சில வேளைகளில் அடுத்தது காட்டும் பளிங்கு போன்ற முகம்கூட நெஞ்சம் கடுத்ததைக் காட்டத் தவறிவிடுவதுண்டு. அதனால்தான் தாமரை தவித்தான். மேலும் என்ன பேசுவதென்றே தெரியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கும்போதே டாக்டர் தொடர்ந்தார்.

'உன் தாயார் ஒரே பிடிவாதமாக இருக்கிறார்களே?'' என்றார்.

"நானும் அப்படித்தானே?" என்றான் தாமரை.

"ஆமாம்... ஆமாம்... இருதுருவங்கள் இருப்பதால்தானே பூமத்தியரேகையென்று ஒன்று தேவைப்படுகிறது" என்றார் டாக்டர்.

மேலும், "நீ திடமாகவே முடிவு செய்துவிட்டாயா வீணாவதியைத் திருமணம் செய்துகொள்வதென்று?" என்றார் டாக்டர். இந்தக் கேள்விக்குறி தாமரைக்கு ஆச்சரியக் குறியாகக் காட்சியளித்தது.

"என்ன டாக்டர்! எல்லாம் தெரிந்த நீங்களே இப்படிக் கேட்கிறீர்களே. நீங்கள் என் தாயாருக்குத் தக்கபடி சொல்லியிருப்பீர்கள் என்றல்லவா நினைத்தேன்" என்றான் தாமரை.

"எல்லாம் தெரிந்ததால்தான் கேட்கிறேன், உன் முடிவு இறுதியானதுதானா" என்றார் மறுமுறையும் டாக்டர். தாமரைக் கண்ணனுக்கு, டாக்டர், தன்னைப் பொறுத்தவரையில் வீசும் புயலாக இருக்கிறாரா அல்லது அசையும் தென்றலாக இருக்கிறாரா என்பதை அறிந்துகொள்ள முடியாது மறுமுறையும் திணறினான். நண்பர்களே சிலவேளைகளில் பகைவர்களாக நடிப்பது உண்டல்லவா?

"டாக்டர்! என்னடா தாமரைக் கண்ணன் திரைப்பட வசனம் பேசுகிறான் என்று நினைக்கவேண்டாம். "வானத்து வெண்ணிலவே வையத்தில் பெண்ணுருக் கொண்டுவந்தாலும் சரி இவன் வீணாவதியைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டான்" என்றான் கெம்பீரமாக. களத்துக்குத் தயாராகிவிட்ட வீரனைப்போல ஆகிவிட்டான் தாமரை. சொல்லும் செயலும் இணையத் துடிக்கும்பொழுது மனிதன் எதற்கும் அஞ்சமாட்டான் என்பதை அப்போது அவன் பிரதிபலித்துக் கொண்டிருந்தான்.

"தாமரை... நான் ஒன்றைமட்டும் கூறுவேன், காதலிக்கத் தெரிந்தவனுக்கு வாழத் தெரிவதில்லை. வாழத் தெரிந்தவனுக்குக் காதலிக்கத் தெரிவதில்லை. இந்த உண்மை உனக்குத் தெரியுமா?" என்றார் டாக்டர்.

"இன்றைய சமுதாயம் காதலிக்கத் தெரிந்தவனை வாழ விடுவதில்லை, வாழ்பவனைக் காதலிக்க விடுவதில்லை. அதனால் வந்த கோளாறுதான் நீங்கள் சொன்னது. எனினும் என்னளவில் இவ்விரண்டும் தோற்றுவிடும்" என்றான் நெஞ்சை நிமிர்த்தி.

"ஊம்... அப்படியானால் உனக்கு இரண்டும் தெரியும் என்கிறாய்" என்றார் டாக்டர்.

"ஆமாம்..." என்றான். போட்டிக் களத்திலே ஒரு சந்தர்ப்பம் கேட்கும் இளைஞனைப்போல இருந்தது தாமரையின் அந்த "ஆமாம்" வாழ்க்கையும் ஒருவகையான களம் தானே!

டாக்டர் சிறிதுநேரம் அமைதியாக இருந்துவிட்டு, 'உனக்குக் காதலிக்கவே தெரியவில்லை என்கிறேன்" என்றார். எதிர்பாராத இந்த வாக்கியம் தாமரையைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. நீந்தத் தெரிந்திருந்தும் நீருக்குள்ளே மூழ்கிவிட்டால் மூச்சுத் திணறித்தானே ஆகவேண்டும். அதுபோலாகிவிட்டது அவன் நிலை. எப்படியோ சமாளித்தவனாக, "உண்மையாகவா டாக்டர், உண்மையாக நீங்கள் அப்படி எண்ணுகிறீர்களா?" என்றான் தாமரை.

"இல்லாவிட்டால் வீணாவதியைச் சுற்றிக்கொண்டு காதல் — கல்யாணம் என்றெல்லாம் பேசுவாயா" என்றார்.

அவனால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை, "என் காதல் தூய்மையானது டாக்டர்" என்று கத்தியேவிட்டான்.

"உன் காதல் தூய்மையானது தான். ஆனால் அவள்...அவள்..." டாக்டரின் தொண்டை அடைத்தது. காற்றுப் பையை அழுத்திப் பிடித்துவிட்டது போலத் திணறினார். அவனால் பொறுக்கவே முடியவில்லை, "அவள்...அவள்... என்ன டாக்டர்?" என்று மறுமுறையும் கத்தினான்.

"நான் சுற்றிச் சுற்றிக் கூறுவதிலே என்ன இருக்கிறது. நேரடியாகவே கூறிவிடுகிறேன். நீயோ எனது நண்பன். இவ்விடயத்தில் என்னை வேறு மிகவும் நம்புகிறாய். நானே என்மீது தவறு சொல்லாதே என்று நிறுத்தினார். தாமரைக்குத் தன் இதயத்தை டாக்டர் வெளியில் எடுத்துப் போட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பது போன்றிருந்தது.

"மறுபடியும் சுற்றிவளைக்கிறீர்களே" என்றான் கெஞ்சலாக.

"நீ அவளை ஏதோ இளமை வேகத்தில் சுற்றித் திரிகிறாய் என்றுதான் நினைத்திருந்தேன், இன்றோ..." என்றார் டாக்டர்.

"இன்றோ...?" தாமரைக்கண்ணனும் அதையே திருப்பிச் சொன்னான்; அந்நிலையில் அவனால் வேறு எதுவும் செய்வதற்கில்லை. புயல் வருகிறது என்ற முன்னறிவிப்புக்

ருப்பிறகு எதைக்காப்பது, எப்படிக் காப்பது என்பது புரியாமல் மக்கள் தத்தளிப்பார்களே, அதுபோலத் தத்தளித்தது அவன் மனமும்.

"இன்றே; அவளையே கல்யாணம் செய்துகொள்வேன் என்று கூறுகிறாய். அவளோ வழிதவறியவள்" என்றார் முகத்தை வேறுபுறம் திருப்பியவாறே சவ்தானமாக.

"டாக்டர்... இதயத்தின் அடித்தளத்திலிருந்து குமுறியெழுந்தது சொல். தன்னை யாரோ எரிகின்ற தணற்குழியிலே தூக்கி வீசி எறிவதுபோன்று இருந்தது அவனுக்கு. புயல், பூகம்பம், எரிமலை எல்லாம் ஏககாலத்தில் நடமாடுவதுபோலாகிவிட்டது. அவனை மறந்து அவன் கத்தினான்.

"உண்மையாகவா?"

டாக்டர் மெல்ல எழுந்துசென்று சன்னல்கம்பிகள் மூலமாக வெளியில் நோக்கியவாறே "ஆம்......" என்றார். வானத்தில் இரண்டு பறவைகள் வேறுவேறு திசையை நோக்கிப் பறந்துகொண்டிருந்தன.

'இதுவரையில் என்னிடத்தில் சொன்னதில்லையே?" என்றான்.

"நீ இவ்வளவு தீவிரவாதியாவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லையே" என்றார்.

மேலும் தாமரைக்கண்ணனால் அங்கு நின்றுகொண்டிருக்க முடியவில்லை. அறையின் கதவைப் படீரென்று தள்ளியவனாகத் தலைதெறிக்க ஓடினான்.

•

தாமரைக்கண்ணன் வீணாவதியின் அறைக்குச் சென்று அவளைத் தேடினான். அவளோ அங்கில்லை. விடுமுறை நாளாதலால் எங்கோ யாரையோ தேடிச் சென்றிருந்தாள். எப்பொழுதும் போல அறையின் சாவி இருக்கும் இடத்தைத் தேடியெடுத்துக் கதவைத்திறந்து உள்ளேபோய்க் கட்டிலில் அமர்ந்தான். அவனால் அமர்ந்திருக்க முடியவில்லை. நின்று நின்று எரியும் மின்சாரவிளக்குக் கொத்தின் நிலைபோல எண்ணங்கள் பலப்பல அவனோடு கண்ணாம்பூச்சி விளையாடியபடியிருந்தன. அவனுக்கோ ஆயிரக்கணக்கான குண்டுகள் தன்மீது பாய்வதுபோன்றிருந்தது. தீப்புண்கள் பட்டவன், நிலைகொள்ள முடியாது தவிப்பதுபோலத் தவித்தான். நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே அவன் மனம் கடிகாரத்தின் பெண்டுலம்போல ஊசலாடியது. சந்தேகம் ஒரு பேய். அது பிடித்துவிட்டால் பித்தனாவதைத் தவிர வேறுவழியில்லை. அதிலும் அவனது நம்பிக்கைக்குப் பாத்திரமான டாக்டரிடமிருந்து எழுப்பப்பட்டிருக்கும்பொழுது, அச் சந்தேகமே முழு நம்பிக்கைக்குரிய நண்பனாகிவிட்டதிலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வீணாவதி வந்தவுடன் அவளைத் திட்டுத் திட்டென்று திட்டி...அவனால் மேலும் நினைக்க முடியவில்லை. உள்ளத்திலே எழுந்த குமுறல் காரணமாக ஓராயிரம் தாறுமாறான எண்ணங்கள் நடமாடின. இருந்தாலும் உணர்வென்னும் அறிவலைகள் எழுந்து அவ்வப்போது அவற்றிற்குத் தடையும் விதித்தன. வீணா வந்தவுடன் 'நீ விபச்சாரி' என்று கத்திவிடவேண்டும் என்று எண்ணுவான். சே...... அவள் முகத்திலேயே விழிக்கக் கூடாது. அவள் யார்? நான் யார்? என்று போய்விடவேண்டும். அது தான் சரியான வழி என்று எண்ணுவான் மறுகணம். இல்லை...... வந்தவுடன் அவளை அடி அடியென்று அடித்து......நான் யார் அவளை அடிக்க? அவளுக்கும் எனக்கும் என்ன உறவு? இருந்தாலும் அவள் பலே கைக்காரி தான். இத்தனை காலமும் எத்தனை பத்தினித்தனமாக என்னிடம் நடந்துகொண்டாள். ஒருவேளை டாக்டர் வேண்டுமென்றே தவறாக......? இருக்காது... இருக்காது... ஒருக்காலும் இருக்கமுடியாது...... நமது நன்மையை எப்பொழுதும் நாடுபவராயிற்றே அவர். அவரால் தானே இவளின் தொடர்பே! சரி.........சரி......என்ன வந்தாலும் இனி இப்படிப்பட்டவளைப் பார்க்கக் கூடாது. நம்முடைய உறவு இன்றோடு அறுந்தது. அவள் வருவதற்குள் நாம் வெளியேறிவிடவேண்டும் என்றெல்லாம் அவன் மனம் உளைந்தது. ஆச்சியர்கள் தயிர்கடையும் கைகள்போல அவன் மனத்தின் எண்ணங்கள் போவதும் வருவதுமாக அவனை வதைத்தன. இருந்தாலும் இறுதியில் சமாளித்தவனாக, எதற்கும் இனி நமது நிலை என்ன என்பது தெரியட்டும் என்று எண்ணியவனாக ஒரு கடிதத்தை எழுதினான்.

வீணாவதிக்கு,

உன்னைப்பற்றி ஊரறியுமுன் நானறிந்துகொண்டேன். நல்ல காலம், பிழைத்தேன் நான்.

டாக்டர் கூறிவிட்டார்... எல்லாம் புரிந்துவிட்டது.

உன்னால் என் தாயின் சொல்லைக்கூடத் துச்சமென மதித்தேன். என்வாழ்வில் உன்னையே பூஜித்தேன், ஆனால் நீயோ...... வீண்வாதம் எதற்கு? என்னால்

"திராவிட நாடு" பொங்கல் மலர், விலை ரூ. 1-00

ஏஜண்டுத் தோழர்களுக்கு

பொங்கல் மலரில் அண்ணா அவர்களின் கருத்துப் படையல்களே அதிகம் இடம் பெறுவதால், தாங்கள் முன்னதாகத் தேவையான காப்பிகளுக்கு ஆர்டர் தருவதுடன், மலர் 1-க்கு 0—75 காசு வீதம் முன்பணம் அனுப்பிவைக்கவும். 28—12—'59க்கு மேல் வருகின்ற ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

பொறுப்பாளர்.
"திராவிட நாடு"

முக்கிய அறிவிப்பு:— பழையபாக்கி வைத்திருப்பவர்கள், பாக்கி முழுவதையும் மலருக்குரிய முன்பணத்தோடு சேர்த்தனுப்பினாலன்றி, மலர் அனுப்பப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் எப்படி எழுதமுடியும் நீ என்னை மறந்துவிடு. மறவா விட்டாலும் அதுபற்றி எனக்குக் கவலையில்லை. நான் உன்னைக் கைகழுவிவிட்டேன், என்னிடம் இனி நீ எதையும் எதிர்பாராதே.

ஏமாற இருந்த,
தாமரைக்கண்ணன்.

எழுதிமுடித்தவுடன் அங்கிருந்த மேசைமீது வைத்துவிட்டு வெளியேறப்போனான். அப்பொழுது வீணாவதி எதிர்பாராமல் அங்கு வந்து சேர்ந்தாள். வந்தவள் அன்றலர்ந்த செந்தாமரையாக "வந்து நெடுநேரமாயிற்றா? மன்னிக்கவேண்டும் தாமரைக்கண்ணன்" என்றாள். சொல்லிலே குழலும், யாழும் போட்டியிட்டன. தாமரைக்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை சிலமணித் துடிப்புகள் அப்படியே நின்றுவிட்டான். பயங்கரமான மிருகத்தின் கண்களிலேயே படாமல் ஓடிவிடவேண்டும் என்று எண்ணியிருந்தவன் முன்பு அம்மிருகமே வந்துநின்றால்...பின்னர் சமாளித்தவனாக, "ஆமாம்... ஆமாம்...நான் போய் வருகிறேன் நேரமாகிவிட்டது" என்று மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வீணாவதியின் சொல்லுக்குக் காத்திராமல் வெளியேறினான். அந்நிலை குற்றவாளி ஒருவன், தான் தப்பியோடச் செய்துகொள்ளும் சாகசம்போல இருந்தது. வீணாவதிக்கோ அவன் சென்ற நிலையைக் கண்டு சிரிப்பு ஏற்பட்டாலும் ஏன் இப்படிப் பார்க்கக்கூடாத பிராணியைப் பார்த்துவிட்டது போல் மிரண்டு ஓடவேண்டும்? என்றும் இல்லாத ஒன்றாக இருக்கிறதே இது என்று நினைத்தவளாக உள்ளே சென்றாள். அவளுக்கு அந்த நினைவே இன்பத்தை இதயத்திலே தேக்கியது. உள்ளே சென்றதும் அங்கே மேசைமீது தாமரை எழுதிவைத்துச் சென்ற கடிதம் இவள் கண்ணில் பட்டது.

*

தாமரைக்கண்ணன் நேரே சென்று தன் தாயிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். 'இனி எல்லாம் உன் மனப்படியே நடக்கட்டும் அம்மா' என்று கூறிவிடவேண்டும் என்ற ஒரே சிந்தனையோடு வீட்டை நோக்கி நடந்தான்.

மெயில் வண்டியின் வேகம் நிலையத்தை நெருங்க நெருங்கத் துரிதப்படுவதைப்போல வீட்டை நெருங்க நெருங்க அவன் மனமும் வேகமாக அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. எப்படித் தன் தாயின் முகத்திலே விழிப்பது என்பதே அவனுக்குப் புரியாத புதிராகத் தென்பட்டது. எவ்வளவு வீராப்பாக உறுதியோடு பேசினோம் என்று எண்ணும் பொழுதே அவன் மனம் குன்றிப்போயிற்று, என்ன இருந்தாலும் தாயிடம் அப்படிப் பேசியிருக்கக் கூடாது என்று கருதினான். 'என்ன செய்ய? காதல் வேகம் அப்படிப்பட்டது. கட்டுக்கடங்காத காட்டாறுதானே அது! என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். எப்படி இருந்தாலும் தாயைப்பார்த்தாகவேண்டும், மன்னிப்புக்கேட்டாகவேண்டும் என்று அவன் மனம் தீவிரப்பட்டது. விருவிருவென்று வேகமாக வீட்டை நோக்கி நடக்கலானான், போகும் பொழுதே அவன் மனம், 'அம்மாவின் காலடியிலே விழுந்து, அம்மா என்னை மன்னித்துவிடு, மன்னித்துவிடு' என்று கதறிக் கண்ணீரைக் கொட்டிவிடவேண்டும். பிறகுதான் எல்லாம்' என்று எண்ணியது. தூக்கக்கூடாத சுமையைத் தூக்கிக்கொண்டிருப்பவன் எப்பொழுது இந்தச் சுமையை இறக்குவோம் என்று எப்படித் தவிப்பானோ அப்படித் தவித்தான் தாமரை—வாழ்க்கைச் சுமையும் அப்படித்தான், அதிலே துன்பச் சுமையே பெரும்பகுதி சேர்ந்துவிட்டாலோ கேட்கவே தேவையில்லை.

வீட்டின் எதிரே ஒருகார் நின்றுகொண்டிருந்தது. காரைப் பார்த்தவுடனேயே இது டாக்டரின் கார் போலிருக்கிறதே......ஆம். காரின் எண் எம். எஸ். ஒய்......டாக்டரின் காரேதான். தன்னைப்பற்றித் தன் தாயிடம் பேசவந்திருக்கிறார் போலிருக்கிறது! வேறு என்ன இருக்கிறது தற்போது பேச? இதுவும் நல்லதுதான். எல்லாம் டாக்டரே கூறியிருப்பார் என்று நினைத்த நிலையில் வீட்டுவாசலில் வந்து நின்றான். உள்ளேயிருந்து டாக்டரின் குரல் கேட்டது.

"எதையோ சொல்லித் தாமரைக்கண்ணனைச்சரிப்படுத்திவிட்டேன். இன்னும் சற்று நேரத்தில் அவன் உங்களிடத்தில் வரத்தான் போகிறான். அப்புறம் சொல்லுங்கள்... அதற்குள்நான்போயாகவேண்டும், இல்லாவிட்டால் உண்மை வெளிப்பட்டுவிடும்" என்றார்.

"சரிங்க... அப்ப போய்வாங்க. எங்க குடும்பத்திலே ஒரு நல்ல விளக்கேத்த உதவினீங்க. நீங்க எதைச்சொல்லி அவன் மனதை மாத்தினால் எனக்கென்ன. அவன் திருந்தி அந்தச் சிறுக்கியை மறந்தால் சரிதான்." என்றார்கள் தாமரையின் தாய்.

தாமரைக்கு இவர்கள் இருவரின் பேச்சைக் கேட்டவுடன் மின்சார அதிர்ச்சிபட்டது போன்றிருந்தது. வாசலில் நின்றவன் ஒருபுறமாக ஒதுங்கிநின்று மேலும் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்டான்.

"ஆமாம்மா, நான் சொன்னதை மறந்துவிடாதீர்கள். ஏன்னா, அவன் கொஞ்சங்கூட எதிர்பாராத ஒன்றைக்கூறி அவனை மாற்றியிருக்கிறேன்" என்றார்.

"எப்படியோ, நீங்க சொல்லி அவன் மாறிவிட்டான். ஆனா என் சொல்லுதான் ஏறவே இல்லை" என்றார்கள் தாமரையின் தாய். தன் சொல் கேட்கவில்லையே தன் மகன் என்ற தாபம் அவர்கள் மனம்போல வெற்றி கண்டும் நிழலாடியது. பந்தாட்டத்திலே தன் குழு வெற்றி பெற்றாலும், பெற்ற வெற்றிக்கு மகிழும் அதே நேரத்தில் வெற்றி தன்மூலமாகமுகிழ்க்கவில்லையே என்று விசாரப்படுபவனைப்போல இருந்தார்கள் அவர்கள்.

"சொல்றது பொய்யா இருந்தாலும் சரியாச்சொன்னால் எல்லாம் சரியாகிவிடும். சரி சரி நான் வர்றேன். அவன் வந்தாலும் வந்திடுவான்" என்று கூறிக் கிளம்பினார்.

"சொல்றது பொய்யா இருந்தாலும்" தாமரைக்கு இச்சொல் தன் மீது யாரோ எதிரே இருந்து வேலை வீசிவிட்டது போன்று ஆகிவிட்டது. சொல்லாகிய அந்த வேல் தன் நெஞ்சத்திலே பாய்ந்து ஊடுருவ, டாக்டர் வெளிவாசலுக்கு வருவதற்குள், "டாக்டர் சார், நீங்கள் சொன்னதுபொய்யா?" என்று அலறிவிட்டான். அதற்கு மேலும் அவனால் அங்கு நிற்க முடியவில்லை. "வீணா..., நான்... நான்" என்று கூறியவாறே வாசலைவிட்டு இறங்கித் தெருவுக்கு ஓடினான்,

டாக்டருக்கும், தாமரையின் தாய்க்கும் எதிர்பாராத இந்த நிலை காரியம்யாவும் கெட்டுவிட்டதோ என்ற பீதியைக் கிளப்பியது. ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். அந்தப் பார்வை... பலூனை ஊதி முடிக்குமுன் ஊசிபட்டு விட்டதோ என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொள்வது போன்றிருந்தது.

டாக்டர் வெளிவாசற்புறம் வந்ததும் "தாமரை... தாமரை..." என்றார். தாமரைக்கு அவரின் அழைப்புக்காதிலே எப்படிவிழமுடியும்? வீதியில் இறங்கியவன் நேராக டாக்டரின் காரை எடுத்துக் கொண்டு வீணாவின் அறை நோக்கிப் பறந்தான்.

*

எண்ணக்குழப்பங்கள் பின்னணி செய்யக் காரை வேகமாக ஓட்டினான். மனம் அவனை ஓட்டியது. எனினும் அந்தச் சமயம் அவனால் எதையும் சிந்திக்கவும்முடியவில்லை, சிந்திக்காமலும் இருக்க முடியவில்லை. சுழலிலே சிக்கிவிட்ட பொருள் போல அவன் மனம் சீரழிந்தது. வீணாவதி... அவனால் மேலும் நிதானிக்க முடியவில்லை. எப்பொழுதும் காரை ஓட்டும் பொழுது இருபுறமும் உள்ள கட்டிடங்கள் யாவும் இவனைவிட்டு ஓடுவதாகத் தென்படும், இதுபோதோ இவனை நோக்கியே ஓடிவருவதாகக் கண்டான்.

காரை வெளியில்நிறுத்தியவுடன் வேகமாக அறைக்குள்ளே புகுந்தான். கதவு சாத்தப்பட்டிருந்தது. அதைவிடத் தற்போது இவன் கைபலம் அதிகமாக இருந்தது. வெறி ஏற்பட்டுவிட்டால் விண்ணையும் சாடலாம் என்பதை அவன் நினைக்கமுடியாத நிலையிலிருந்தாலும், அதற்கு அத்தாட்சியாகக் காட்சியளித்தான்.

கதவைத் திறந்து உள்ளே சென்றான். வீணாவதி கட்டிலில் அமைதியாகப் படுத்திருந்தாள். தாமரைக்கு மேலும் ஒருமின் வெட்டு. "வீணா... வீணா..." தாமரை எழுப்பினான். மேலும் எழுப்பினான். தட்டி எழுப்பினான், அவள் எழவில்லை. பீதி கொண்டவனாக அவளின் மூக்கின் ஓரத்திலே கை வைத்து மூச்சைப் பார்த்தான். புரியவில்லை. கலவரப்பட்ட மனத்தில் நிதானம் ஏது? பொழுது மறையும் நேரத்தில் பொருள்கள் தெரிந்தும் தெரியாமலும் இருக்கிறது அல்லவா? என்ன செய்வது என்ற நிலையில் வேறுபுறம் திரும்பினான். மேசைமேல் அவன் கடிதம் வைத்துச்சென்ற அதே இடத்தில் கடிதம் ஒன்று இருந்தது. ஒடித் தன் கடிதமாக இருக்கும், 'நல்லவேளை இன்னும் அவள் பார்க்கவில்லை போலிருக்கிறது' என்று எடுத்துப் பார்த்தான். அவன் எண்ணியபடியே அவன் கடிதம்தான், ஆனால்...... நீரோட்டத்திலே அடித்துச் செல்லப்படுபவன், எதிரே தெரியும் சிறு துரும்பையும் பிடித்துக் கரையேற முயற்சிப்பானே அதுபோலாகிவிட்டது அவன் நிலை. இவனின் எழுத்துக்கு மேலும் எழுத்துக்கள் தொடர்ந்தன. வீணா எழுதியிருந்தாள். நடுங்கிய கரங்களுடன் படித்தான்.

தாமரைகண்ணனுக்கு,

அன்புடையாளின் இறுதி வணக்கம். தங்களின் கடிதம் கண்டேன். அதில் உள்ள சொற்களுக்கு நான் பதில்கூறப் போவதில்லை. ஏனென்றால் நான் யாருக்கும் பதில் சொல்லத் தேவை இல்லை என்றே கருதுகிறேன். சாகப்போகிறவளுக்கு உலகம் துச்சம்தானே? ஆனால்...ஒன்று. காதலர்கள் கருத்தொருமித்த காதலர்களாக இருந்தால் மட்டும் அவர்களின் வாழ்வு நிலைபெற்றுவிடாது, அதோடுகூடக் காதல் நிலையிலே குறுக்கிடும் மான அவமானப் பிரச்னைகளையும் பொறுத்திருந்து அலசி, ஆராயும் தன்மை கொண்டிருப்பவர்களுக்கே அது வெற்றி தரும் என்று நான் உணர்கிறேன். இல்லாவிட்டால் நீங்கள் யாரோ உருட்டிவிட்ட பகடையாகி என்னைப் பலி வாங்கியிருப்பீர்களா?

இன்றைய சமுகம் இருக்கிறதே! அது எங்களுக்கு வழங்கும் நீதி, பக்தன்தான் செய்த தவறுக்கு ஒன்றும் அறியாத ஆட்டைப் பலியாகக் கொடுக்கிறானே ஆண்டவனுக்குப் பிராயச்சித்தமாக. அது போலத்தான், நாங்களும் பலியாடுகள்தான், சமுதாயச் சட்டங்களுக்கு. இல்லாவிட்டால் காதலிக்கத் தெரிந்த அளவுக்கு அதைப் பொறுத்துக் காக்கத் தெரியாத உங்களுக்காக நான் பலியாக நேருமா?

இதோ என் முன்னே நஞ்சு, ஊசி முனையிலே நிற்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் என் இரத்தத்தோடு கலந்துவிடும். அப்புறம் நான்...... அது பற்றிக் கலங்கவில்லை. மலர்கள் உதிர்வதே புத்தம் புது மலர்கள் பூக்கத்தானே! ஆனால், சிலர்...மலரைத் தானாக உதிரவிடாது இடையிலே கிள்ளி எடுத்து வெறும் தரையிலேயே வீசிவிடுகிறார்கள். நல்ல வேளையாக மலர்ச்செடியின் வேரையே கிள்ளிவிட யாரும் இன்னும் முற்படவில்லை. அதுவரைக்கும் நன்றி செலுத்தலாம் என்றாலோ அதுவும் சுயநலமாக இருந்தால்?

உங்களை நான் மனமாரக் காதலித்தேன். அது உண்மை. அது ஒருவேளை தவறுடையதாக இருந்தால், நான் நடத்தை கெட்டவள்தான்.

நான் என்னுடைய சாவைக் கொண்டு என்னுடைய தூய்மையை நிறுவ முயற்சிக்கிறேன். அந்த முயற்சியில் நான் வெற்றி பெறுவேன் என்றே திடமாக நம்புகிறேன். என்னைப்பற்றிய உண்மை மயக்கமறத் தெரிந்து நான் தூயவள்தான் என்பதைத் தெளிவாக அறிந்துவிட்டீர்களானால், நீங்கள் எனக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விடுங்கள். அதுவே நான் உங்களோடு பல்லாண்டுகள் வாழ்ந்ததற்குச் சமம்.

இந்தக் கடிதம் உங்கள் கையில் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அந்தச் சக்தி கூடவா நம் காதலுக்கில்லை? இது என் குருட்டு பக்தியல்ல, நம்பிக்கையொளி.

துர்ப்பாக்கியவதியான,

வீணாவதி.

திரும்பிப் பார்த்தான் வீணாவதி செத்தும் சிரித்துக்கொண்டிருந்தாள். மின்சாரக் கம்பிகளிடையே சிக்கி அடுத்தடுத்து ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு தூக்கியெறியப் பட்டவனுடைய நிலையில் எந்த உணர்ச்சியும் அற்றுவிட்டவனைப் போலக்காணப்பட்டான். எனினும் விழிக்கடையிலிருந்து கண்ணீர் கரைபுரண்டு எழுந்தது, அது உருண்டு கீழே விழுவதற்குமுன் "நன்றுசொன்னாய் வீணா...! நன்று சொன்னாய்...நான் உருட்டிவிட்ட பகடையானேன். அதற்கு ஒரு தீங்கும் செய்யாத நீயா பலி......" என்றவாறே மயங்கி அவள்மேல் விழுந்தான். டாக்டர் வந்து மூர்ச்சை தெளிவிக்கும் முயற்சியில் தம்முடைய முழுத்திறமையையும் பயன்படுத்தினார்...ஆனால்...!!!

*

நூல்கள்

—[காரிமாறன்]—

"நீ புகழ்பெற வேண்டுமானால், பிறர் உன்னைப்பற்றி எழுதும்படியாக நடந்துகொள். இன்றேல் பிறரால் போற்றப்படும் இலக்கியங்களைப் படைத்துக் காட்டு" என்று ஓர் அறிஞன் கூறினன். இந்த இருவகைச் செயல்களும் செய்வதற்குக் கடினமானவைதான். இரண்டாவது வழியைப் பின்பற்றி அழியாப் புகழைத் தேடிக்கொள்கின்றனர் எழுத்துலகச் சிற்பிகள். ஒரு சிலர்தான் தாங்கள் எழுதிய அறிவுரைகளைக் கடைபிடித்து வாழ்ந்தனர். பலர் அவ்விதம் வாழவில்லை என்றாலும், பிறர் படித்துப் பயனடையும்படி சிறந்த இலக்கியங்களைத் தந்துவிட்டுச் சென்றனர். காலத்தால் அழிக்க முடியாத அத்தகைய பேரிலக்கியங்கள், மனித சமுதாயத்தின் மேன்மைக்கும், முன்னேற்றத்திற்கும் பல்லாண்டுகாலமாக வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. மனிதனிடமுள்ள மிருக சுபாவம் அழிந்துபட, மனிதன் மனிதனாக வாழ, அப்பேரிலக்கியங்கள் பெருந்துணை புரிகின்றன. அவைகள் உலகம் உள்ளளவும் மக்களால் போற்றப்படும் பெற்றி வாய்ந்தவை.

சில நூல்களைப் படித்தால் படிக்கும் பொழுதுதான் இன்பமாக இருக்கும். பிறகு, அவ்வகைகளைப் பற்றி நாம் நினைப்பதுகூட இல்லை. பல நூல்கள் சில காலம்வரை மக்கள் ஆர்வத்தோடு படித்துப் பயனடையும்படியாக இருக்கும். பின்பு, அதன்கருத்துக்கள் காலத்தோடு மாறுபட்டு மக்கள் மன்றத்தில் மதிப்பற்றுப் போய்விடுகின்றன. ஆனால், எக்காலத்தும், எல்லோராலும் போற்றிப் புகழப்படும் நூல்கள்தான், உலகின் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இந்த வகையில் திருக்குறள் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. வாழ்நாள் முழுவதும் படிக்கவேண்டிய நூல்களில் இது முதன்மையானது.

உலகப் பேரறிஞர்களில் சிலர் சில நூல்களைப் பலமுறை படித்துப் படித்து இன்பம் துய்த்துள்ளனர். அறிஞன் சார்லஸ் ப்ரே, "ஒவ்வொரு சிறந்த நூலும் குறைந்த பக்ஷம் மூன்றுமுறை படிக்கத் தகுந்தது" என்கிறான். வேறுசில மேதைகள் சிறந்த புத்தகங்களின் கருத்துக்களை அப்படியே, "ஜீரணித்துக் கொள்ளவேண்டும்," என்றனர். பேரறிஞர் கால்ரிட்ஜ், ஜான் புன்யன் எழுதிய யாத்திரிகர்களின் பயணம் (முன்னேற்றம்) என்னும் நூலைப் பல முறை படித்துள்ளார். இலக்கிய மேதை போப் எழுதிய "ஹோமர்" என்னும் நூலை ஆங்கில அரசியல் தத்துவ ஞானி ஜெ. எஸ். மில் இருபது தடவைகளுக்கு மேல் படித்துள்ளாராம். ஜேன் ஆஸ்டின் என்ற நாவலாசிரியையின் நூல்கள் அனைத்தையும் மனப்பாடம் செய்தாராம் லார்ட் ரோஸ்பரி என்னு மேதை. அதைப்போல கூப்ப எழுதிய "ப்ரெய்ரி" என்னும் நூ ஆன்டெனி ட்ரோலாப் கணக்கற் முறை படித்துள்ளாராம்.

அமெரிக்க நாட்டு முன்ன ஜனதிபதி ப்ராங்லின் ரூஸ்வெல் இலக்கிய மேதை சார்ல் டிக்க சின், "கிறிஸ்மஸ் கரோல், என்னு நூலை ஒவ்வொரு கிறிஸ்துவ பண்டிகையின் போதும் ப பாராம். பேராசிரியர் மெக்க லேவுக்கு "ஜில் ப்லாஸ்" என்னு நூலைப் பல முறை படித்து அதைப் படிப்பதில் ஆர்வ குறையவில்லை.

சர்வாண்டிஸ் எழுதிய "டா க்விட் சாட்" என்னும் நகைச்சுவை ததும்பும் நாவலைப் பல மு படிப்பதில் சளைக்காதவர்க சார்லஸ் டிக்கன்சும் எட்வர் பிட்ஜி ரால்டும்.

இலக்கிய மேதை "விக்கார் ஆ வேக் பீல்ட்" என்னும் நாவ வாழ்நாள் முழுவதும் கணக்கற் முறை படித்தார், சென்னை உய நீதி மன்ற முன்னாள் நீதிபதி சர். முத்துசாமி (ஐயர்) அவர்கள்.

வாழ்நாள் முழுவதும் படித்து பயனடையும்படியான நூல்கள் ப உள்ளன. அவைகள் மனிதனி உள்ளத்தில் எழுச்சியையு கிளர்ச்சியையும் உண்டாக்கி அவ வாழ்க்கையையே மாற்றி அமை கும் சக்தி வாய்ந்தவை. சாதார மனிதன் மேதையாக மாறுகிற வாழ்க்கையின் பெரும் பய அடைகிறன். ஆகவே, மனி சமுதாயம் முன்னேற உதவு பேரிலக்கியங்கள் என்றும் வா என்று கூறுவோம்.

★

"திராவிட நாடு" பொங்கல் மலர்.

சந்தாதாரர்களுக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூபா ஒன்று. எனவே, மலர் தேவைப்படும் சந்தாதாரர்கள் 0—50 புதிய காசு அனுப்பி மலரைப் பெறவும். பதிவுத் தபாலில் பெற விரும்புவோர் ரூபா 1—00 அனுப்பிப் பதிவு செய்து கொள்வதுடன், பணம் அனுப்பும்போது சந்தா எண்ணைத் தவறாது குறித்தனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

மூன்றாம் நாள்

பிற்பகல் மணி ஒன்று. பணி மனைக்கும் தொழிற்சாலையின் சுற்றுச் சுவர்களுக்கும் இடையே பல நிழலுள்ள மரங்கள் இருந்தன. ஓர் ஆலமரத்தின் விழுதில் சாய்ந்தவாறு இளையாதித்தன் பிற்பகல் உணவைச் சுவைத்து உண்டு கொண்டிருந்தான். மரத்தின் கிளைகளில் காக்கைகளும் குருவிகளும் குழுமியிருந்தன. புல் தரையில் அணிற்பிள்ளைகள் அச்சமின்றி உலாவின.

இளையாதித்தன் தனி வீட்டில் இருந்தபோதிலும் மதிய உணவு மட்டும் அருளப்பரின் இல்லத்திலிருந்து தருவித்துக்கொண்டான். உடல்நலம் குன்றியிருந்ததால் அருளப்பர் அன்று வேலைக்கு வரவில்லை. தனது உணவின் ஒரு சிறு பகுதியை ஒரு சிறு ஆலிலையில் இட்டுச் சேய்மையில் வைத்தான் ஆதித்தன். இரு அணிற்பிள்ளைகள் அதைத் தம் சின்னஞ்சிறு கால்களால் எடுத்து உண்பதைக்கண்டு அவன் மனம் மகிழ்ந்தான். அவ்வப்போது காக்கை ஒன்று அந்த உணவைக்கொத்த வரும். அப்போதெல்லாம் அணிற்பிள்ளைகள் விலகி ஓடும். அங்கே ஒரு கவிதைச் சூழ்நிலை நிரம்பியிருந்தது.

தொழிற்சாலையின் ஒலிபெருக்கி ஓர் இனிய பாடலை இசைத்தது. உணவுண்ணும் இளைஞன் ஒருவன் புள்ளினங்களைத் தன்னுடன் விருந்துண்ண அழைக்கும் பாட்டு அது. அந்தப் பாடல் புகழ்பெற்ற திரைப்படமொன்றில் பாடப்பெற்றது. தமிழர்களின் தன்மான உணர்ச்சியைப் பெரும் அளவில் தூண்டிய படம் அது. அதை இளையாதித்தன் மலேயாவில் பார்த்தான். அதைக் கண்டதுமே தமிழ் மக்களிடம் தன்மான உணர்ச்சி தலை எடுத்துவிட்டது என்ற உண்மையை உணர்ந்துகொண்டான். சிலகணங்கள் அந்த நினைவிலேயே ஆழ்ந்து நின்றான். உளத் திட்பமும் புயவலிமையும் உள்ள தன்னின மக்கள் வேறு நாடுகளில் சென்று சீரழிவதை எண்ணி அவன் மனம் புண்பட்டது.

பாண்டியன் என்ற இளைஞன் அப்போது அங்கே வந்து அவனுடைய தனிமையைக் கலைத்தான்.

தில்லை—அரசன்

அவன் கையில் திங்களுக்கிருமுறை வெளிவரும் ஏடு ஒன்று இருந்தது. 'அண்ணே, குரவன் என்றால் என்ன பொருள்?' பாண்டியன் கேட்டான்.

"எதற்காகக்கேட்கிறாய்?" ஆதித்தன் சற்றுச் சினத்துடன் வினவினான்.

"நான் அறிவுப்போட்டியில் பங்கெடுத்துக் கொள்ளுகிறேன், உனக்கு இலக்கியமும் சொற்களின் பொருளும் நன்றாகத் தெரியும் என்று தறி பழுதுபார்க்கும் பெருமாள் சொன்னான்; குறவன், குரவன், இரண்டிற்கும் என்ன வேற்றுமை?"

ஆதித்தன் அவன் கையில் இருந்த ஏட்டை வாங்கிப்பார்த்தான். அது ஒரு திரைப்பட ஏடு. இலக்கியச் சுவையே அற்ற கீழ்த்தரமான கதைகள் அதில் இருந்தன. அதன் ஒரு பக்கத்தில் கறுப்பும் வெளுப்புமான கட்டங்களில் இடையே தமிழ் எழுத்துக்கள். பெற்ற தாய்மொழியை வைத்துக்களிக்கும் சூதிற்கு அறிவுப்போட்டி என்று பெயர் கொடுத்திருந்தது. இன்னொரு பக்கத்தைப் புரட்டினான் இளையாதித்தன். அதில் ஒரு புகைப்படம். சிவப்பழமாகத் தோற்றமளித்த ஒரு முதியவர் அதில் காட்சியளித்தார். உடலிலும் நெற்றியிலும் கட்டுக்கட்டாகத் திருநீறு. கழுத்திலும் கைகளிலும் அக்கமணி ஆரங்கள். இடுப்பில் பட்டுக்கரை வேட்டி. ஞானவாழ்வுப் போட்டியில் முதல் பரிசு பெற்றதாக அதில் அச்சிடப்பட்டிருந்தது. இளையாதித்தின் உடல் பற்றி எரிவதுபோல் உணர்ந்தான். அந்த ஏட்டை வீசி எறிந்து தன் சினத்தைத் தணித்துக் கொண்டான். மிகுதியிருந்த சோற்றைப் பறவை இனங்களுக்கு வாரி இறைத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

பரவிநின்ற அந்த மரத்தின் மறு பகுதியில் ஒரு குழு சீட்டாடுவதில் ஈடுபட்டிருந்தது. இடைவேளையாகக் கிடைக்கும் நாற்பது மணித்துளி ஓய்வில் ஒருவட்டம் சீட்டு ஆடி முடிப்பதில் அவ்வளவு ஆவல். 'தனிமையைக்கண்டு மனிதன் அச்சம்கொள்ளுகிறான், அதைத் தவிர்க்கவே அவன் கூட்டத்தை நாடி ஓடுகிறான்' என்ற பேரறிஞனின் கூற்றொன்று அவன் நினைவுக்கு வந்தது. அவர்களிடம் சில நேரம் தாமதித்தான்.

ஆட்டம் பேச்சுடனே நடந்தது. 'வரவர நம் உணவுவிடுதியில் ஒன்றுமே சுவையாக இல்லை. இன்று இறைச்சிக் கறியில் வெறும் எலும்புத்துண்டுதான் கிடந்தது. தயிர்க் கண்டத்தை நீரில் ஊறவைத்திருந்தார்கள்' ஒருவன் கூறினான்.

'உண்மைதான், அவர்கள் தந்த இட்டலியின் நிறையும் ஓரணு எடைதான் இருக்கிறது! மற்றவன் முதலவனின் கூற்றை ஆமோதித்தான்.

இதைக் குறித்து நம் தொழிலாளர் நலக் கண்காணிப்பாளரிடம் முறையீடு செய்தால் என்ன?

முறையிட்டினால் ஒரு பயனும் இல்லை. இந்த உணவுவிடுதியைத் தொழிலாளர்கள் சார்பிலேயே நடத்தவேண்டும் என்று நாங்கள் விண்ணப்பித்துக்கொண்டோம். நம்பி என்ற இளைஞன் பேசத் தொடங்கினான். மற்றவர்கள் ஆடுவதை நிறுத்திவிட்டுச் செவிசாய்த்தார்கள்.

தனியார் துறையில்தான் இத்தகைய தொழில்கள் சிறப்புற

நடக்குமாம், மேலும் இந்த உணவு விடுதியை நடத்துபவர் ஒரு இடம் பெயர்ந்த அகதியாம். அவருக்கு இந்தத் தொழில் நிரம்ப அனுபவம் உண்டாம். ஆதலால் அவருக்கு ஆதரவு தரவேண்டும் என்று கண்காணிப்பாளர் கூறிவிட்டார். அதற்கெதிராக எங்களால் ஒன்றும் பேசமுடியவில்லை.

இதெல்லாம் வெறும் பொய். இலங்கையில் இந்தத் தொழில் செய்து செழித்த நம்மவர்கள் பலர் இன்று பிழைப்பின்றி இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கென்றால் இப்படி ஆதரவு காட்டுவார்களா? பேசியது ஆதித்தனின் நண்பன் இளவரசன். ஆதித்தனின் முகத்தில் முறுவல் மலர்ந்தது.

கண்காணிப்பாளர் ஏன் ஆதரவு தரமாட்டார்? அவருடைய வீட்டுக்கு ஒவ்வொரு கிழமையும் கூடை கூடையாக இனிப்புப் பண்டங்களை விடுதியின் முதலாளி அனுப்புவதை நீ அறிவாயா? நம்பி திரும்பவும் பேசினான்.

உலகமே அப்படித்தான், நமக்கு ஏனப்பா பெரிய இடத்துப் பொல்லாப்பு? நீ துருப்பை இறக்கு? மற்றவன் கூறினான்.

ஆதித்தன் அங்கிருந்து அகன்றான். இடைவேளை முடிய இன்னும் கொஞ்சம் நேரம் இருந்தது. பணிமனைக்குள் புகுந்தான். அங்கே அவனுக்கு அடுத்த பொறியில் வேலைசெய்யும் சுந்தரம் ஒருசிவத்த வாலிபனுடன் பேசிக்கொண்டிருந்தான். அந்த இளைஞன் கையில் பல துண்டுக்கடிதங்கள் இருந்தன. சுந்தரம் ஏதோ எண்களைக் கூறினான். அதைக் குறித்துக்கொண்ட இளைஞன் சுந்தரத்திடம் ஏதோ தொகை பெற்றுக்கொண்டு ஒரு சீட்டைக் கொடுத்தான். ஆதித்தனைக் கண்டதும் இளைஞனின் முகத்தில் கிலியின் குறி தோன்றியது. ஆதித்தன் சுந்தரத்தின் இருக்கைக்கு அணிமையில் சென்றான். ஒரு தினத்தாளை உற்று நோக்கியவாறு உட்கார்ந்திருந்தான் சுந்தரம். அந்தப்பக்கத்தில் பருத்தி விலையின் எண்கள் இருந்தன. அவனுடைய முகத்தில் பொலிவு இல்லை.

ஆலையின் சங்கு அலறியது. ஆதித்தன் தன்னிடத்திற்கு வந்தான். அவனுடைய மூளையின் நுண்ணிய பகுதியில் ஒளி தட்டிற்று. விசைப்பொறியை இயக்கிவிட்டு அந்தச் சிவந்த இளைஞனை எங்கே பார்த்திருக்கிறோம் என்ற எண்ணத்தில் ஆழ்ந்தான் ஆதித்தன். பொறியின் பகுதி சதக்சதக் என்று ஒலித்துக்கொண்டு முன்னும் பின்னும் ஓடிற்று. துணியின் நீளம் பெருகிற்று. மெழுகு துணியை நூற்களின்மேல் தடவினான் ஆதித்தன்.

“அந்த இளைஞனை எங்கே பார்த்தோம்? சிந்தனை பின்னோக்கிச் சுழன்றது. கடந்த திங்கள் முதல் நாளன்று இரவு அந்த பாகைக்காரருடைய வீட்டிற்குச் சென்றபோது அவனைக் கண்ட நினைவு வந்தது. கணக்கர் அவனை வரவேற்பு அறையில் அமரும்படி கூறினார். ஆதித்தன் எச்சரிக்கையுடன் அங்கேயிருந்த தொலைபேசியின் அருகில் உட்கார்ந்தான். அந்த எண்ணையும் நினைவில் குறித்துக்கொண்டான். அது ஆயிரத்து இருநூற்று ஆறு என்ற எண்ணிக்கையுடையது. அடுத்த அறையில் ஏதோ அரவம் கேட்டது. மெள்ள எழுந்திருந்து பார்த்தான். அந்த அறையில் ஆளுயரத்திற்கு அகலமான கண்ணாடிப் பெட்டி. அதனுள் ஏதோ மின்பொறிகள். அதை இயக்கிக் கொண்டிருந்தவன் இந்த இளைஞன். பொறிஇயல் நுணுக்கம் தெரிந்த ஆதித்தனுக்கு அது ஒரு வான்ஒலி, வாங்கிப் பரப்பும் பொறி என்பது ஒரே கணத்தில் விளங்கிவிட்டது. அந்த வாலிபன் எதையோ அறிவித்தான், ஏதோ செய்திகளைக் குறித்துக்கொண்டான்..........

துணி நெய்யும் பொறியின் விசையை இயக்கி அதை நிறுத்தினான் ஆதித்தன். அலுவலகத்திற்குள் நுழைந்து ஆயிரத்து இருநூற்று ஆறு என்ற எண்ணிக்கையுடைய தொலைபேசி யாரிடமிருக்கிறது என்று அஞ்சலகத்தின் குறிப்பகராதியில் ஆராய்ந்தான். அது சீவன்லாலுடையது.

ஆதித்தனுக்கு எல்லாம் தெற்றென விளங்கிற்று. பழுவூரில் பெரும் பருத்திச் சூதாட்டக் குழுவொன்று அந்தச் சீவன்லாலின் தலைமையில் இயங்குகிறது. இந்த இளைஞன் அந்தச் சீவன்லாலின் கையாள். தொழிலாளர்களிடம் இரகசியமாகத் தொகை பெற்று அவர்களைச் சூதுக்களியிலே ஈடுபடுத்தி உழைப்பாளர்களின் உதிரத்தை உறிஞ்சுகிறான் சீவன்லால். இந்த வாலிபனுடைய தந்தை தான் தொழிலாளர் உணவு விடுதியின் குத்தகைக்காரனும்கூட. நச்சு வட்டம் முழுமையும் ஆதித்தனின் கண்களுக்கு நன்கு புலப்பட்டது.

அன்றிரவு வீடு திரும்பியதும் ஆதித்தன் பல அரசாங்க அலுவலகங்களுக்கு இதைக் குறித்து மடல்கள் வரைந்தான். அவற்றின் பிரதிகளைப் பல நாளேடுகளுக்கும் அனுப்பினான். அந்த விவரத்தையும் மடல்களில் குறித்தான்.

அடுத்த நாளைய செய்தித்தாளில் பெரிய எழுத்துக்களில் ஒரு விவரம் வெளி வந்தது. பழுவூர் நகரத்தின் பெரிய பருத்திச் சூதாட்டக்குழு ஒன்று கையும் களவுமாகக் கைப்பற்றப்பட்டது. நகரத்தின் பெரும் தலைகள் அதில் ஈடுபட்டிருந்தன.

அதுமட்டும் அல்ல, தொழிற்சாலை உணவு விடுதியின் கதவிலும் பெரியதொரு பூட்டுத் தொங்கியது. விடுதியின் குத்தகைக்காரரும் அவருடைய மகனும் இந்தச் சூதாட்டக் கும்பலில் சிக்கிக் கைதானார்கள். உணவு விடுதி தானாகத் தொழிலாளர் மன்றத்தின் பொறுப்பில் வந்து சேர்ந்தது.

அன்று அத்திங்களின் மூன்றும் நாள். ஒரே குண்டினால் இரு பறவைகளை வீழ்த்திய மகிழ்ச்சியைப் பழுவூர்க் குப்பத்தில் கொண்டாடினான் இளையாதித்தன்.

★

கே. வி. கே. சாமியின் தந்தை மறைவு.

மறைந்த கே. வி. கே. சாமியின் தந்தை திரு. கே. வெள்ளையா அவர்கள் 29—11—'59 காலை 6 மணியளவில் அவரது சொந்த ஊராகிய ஈராவில் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவரது பிரிவால் கலையுற்றிருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

பழியும் பாதகமும்!

துளசி

பணம் பத்தும் செய்யும்! தமிழ் நாட்டின் பழமொழி இது! தமிழ் நாட்டில் எதற்குப் பஞ்சம் வந்தாலும், பழமொழிக்கு மட்டும் பஞ்சம் வந்தது இல்லை!!

"பணம் பத்தும் செய்யும்......" அந்தக் காஞ்சிபுரத்து ஆயா நேற்று சொன்னார். எதற்காகச் சொன்னார்?... ஏன் சொன்னார்?... என்று அப்போது நினைத்துப்பார்க்கவில்லை. அந்த ஆயா சென்ற பிறகு நினைத்துப்பார்த்தேன்; கண்கள் குளமாயின.

"பணம் பத்துச் செய்வதற்கு முன்னம் பார்த்துச் செய்யக்கூடாதா?... பணம் வந்துவிட்டால் கண்களும் குருடாக வேண்டுமா?... காதுகளும் செவிடாக வேண்டுமா? ... அறிவும் மங்கவேண்டுமா?...... மனச்சான்றையும் விலை கூறிவிட வேண்டுமா?..." இவ்வாறு என் மனதில் அடுக்குஅடுக்காக கேள்விகள் எழும்பி விடை தெரியாமல் அழுந்தின.

காஞ்சிபுரத்து ஆயா சொன்ன நிகழ்ச்சியை நினைந்தாலும் நெஞ்சம் குமுறுகிறது.

"தமிழ்நாட்டில் ஏழைகளாக வாழவே தகுதி இல்லையா?...ஏழைகளாக வாழ்ந்தாலும் அமைதியோடு வாழமுடியாதா?... ஏழைகளாகப் பிறந்துவிட்டதாலேயே, இந்த உலகம் எதையும் அவர்கள் தலையில் சுமத்திவிடவேண்டுமா?... எதையும் தாங்கக்கூடிய சக்தியும், வாய்திறந்து பேசாத காரணத்தாலும், அவர்களுக்காக இரங்கிப் பேசுபவர்கள் இல்லாததாலும்— இந்த உலகம் அவர்களை வெறுத்து ஒதுக்கவேண்டுமா?...... வீண்பழி முத்திரையோடு அவர்கள் நாட்டில் திரியவேண்டுமா?..." இவ்வாறெல்லாம் அந்த எதிர்வீட்டுச் செல்வச் சீமாட்டியைக் கேட்கவேண்டும் என எண்ணி அவள் வீட்டை அணுகினேன்.

செல்வந்தர் வீட்டு வாயிலில் "அல்சேஷியன்" நாய் குரைத்தது. தயங்கித் தயங்கி நின்றேன். செல்வந்தர் வீட்டு அம்மா, "யாருடா, ராஜா?..." என்று அழைத்தபடி வெளியே வந்தாள். காஞ்சிபுரத்துப் பட்டுப் புடவை சலசலக்க வாயிற்கதவைத் திறந்தாள்.

"வாங்க'ம்மா..." அகம் மலரவில்லை. ஆனால் அந்த அம்மாள் முகம் மலர்ந்து என்னை வரவேற்றாள்.

"காஞ்சிபுரத்து ஆயாவைப் பற்றிப் பேசவந்தேன்" என்றேன்.

வீட்டின் உள்ளே நடந்து சென்றோம். சோபா, நாற்காலி... போடப்பட்டிருந்தன அந்தக்கூடத்தில்.

'சுதா'

உள்ளே இருந்து வேலைக்காரன் எட்டிப்பார்த்தான். "சிலோன்" பாயுடன் என்னை நோக்கி வந்தான். பாயை விரித்தான். "உட்காருங்கள்" என்றாள் அந்த அம்மாள். பாயின்மேல் அமர்ந்தேன்.

சோபாவில், நாற்காலியில் அமரவும் இந்தச் செல்வந்தர் வீட்டில் தகுதிவேண்டும் போல் இருக்கிறது! அவைகளில் அமரப், பட்டுப் புடவையும், வைரக் கம்மலும் வேண்டும்போலும்!

அந்த அம்மாளுடன் நான் இது வரை பேசியது கிடையாது. அவள் எதிர்வீட்டில் வாழ்வதால், அடிக்கடி இருவரும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பழக்கம் ஏற்படவில்லை!

"திருட்டுக் கழுதைகளுக்கு இந்த வீட்டில் இடம் இல்லை!..." அந்த அம்மாள் பேச்சில் கடுமை தெரிந்தது.

"யாரைச் சொல்கிறீர்கள்?..." எனக்கு விளங்காதவள்போல் கேட்டேன்.

சோபாவில் அமர்ந்திருந்தவள் எழுந்து நின்றாள்.

"அந்தக் காஞ்சிபுரத்தா'ளைத் தான்!"

"ஏன்?... என்ன நடந்தது?"

"வைரநெக்லஸைக் காணவில்லை. அதை அவள்தான் திருடி இருக்க வேண்டும். போலீசில் புகார் கொடுத்திருக்கிறேன்."

"நீங்கள் ஆயாவைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள். ஆயா அந்த 'நெக்லஸை' ஒருபோதும் தொடாது... அதை எடுத்துக் கொள்வதால் அவள் வேறு எந்த வயிற்றையும் காப்பாற்றிவிடப் போவதில்லை. அவள் உழைப்பது எல்லாம் அவள் ஒற்றை வயிற்றுக்காகத்தான், உங்கள் உப்பைத் தின்று வேலைக்காரியாக வாழ்ந்தவள், உங்களுக்கு ஒருபோதும் தீங்கு செய்யமாட்டாள்... ஆயாவை நம்புங்கள்..."

"அவளை நம்பி நான் நாசமானது போதும்... இந்த வீட்டில் அவளைத் தவிர வேறு யாரும் அதிக நேரம் இருப்பது இல்லை... எனக்கு அவள் பேரில்தான் சந்தேகம்... இதோ, இந்த வேலைக்கார முத்துவைக் கேட்டுப்பாருங்களேன்."

"ஆமா'ம்மா... ஆயா தான் எடுத்திருக்கும்னு நாங்க நினைக்கிறோம். அம்மா குளிக்கப்போனாங்க...... ஐயா ஆபீசுக்கு புறப்பட்டுவிட்டு

இருந்தாரு... ஆயா அம்மா அறையைக் கூட்டிகிட்டு இருந்தது... அப்போ ஆயா அம்மாவுடைய 'பீரோ'வைத்திறந்து அந்த நெக்லசை எடுத்திருக்கணும்."

"ஆமாம்" என்று அந்த அம்மாள் வற்புறுத்திச் சொன்னாள்.

"என்றால் நம்பவே முடியவில்லை ...அந்தஆயா ஒருபோதும் திருடாதுங்க... நம்புங்க."

"ஏ'ம்மா... அந்த ஆயாவுக்காக நீங்க பரிஞ்சு பேசறதைப் பார்த்தா ... ஆயா அந்த நகையை உங்ககிட்ட கொடுத்திடுச்சா?... வித்துடுச்சா?..." முத்துவின் குரலில் ஏளனம் இழை ஓடியது.

நெஞ்சில் "சுருக்"கென்று தைத்தது அவன் சொன்னது.

"நாவை அடக்கு...நரம்பில்லாமல் பேசாதே...வரம்போடு பேசு... தருமத்தை...நியாயத்தை எதிர்பார்த்து இங்கே வந்தது எவ்வளவு தவறு என்று புரிந்துகொண்டேன். நான வருகிறேன்" என்று வேகமாக நடந்து வந்தேன்.

"நியாயத்தையும் ... தருமத்தையும் பேசற மூஞ்சியைப்பாரு...பேச வந்துட்டா பேச..." என்று அந்த அம்மாள் பேசிய பேச்சுக் கடைசியாக என் காதில் விழுந்தது. அதைத் தொடர்ந்து முத்துவின் சிரிப்பொலியும் கேட்டது.

நான் யாருக்காகச் சிரிப்பது?... எவருக்காகச் சிரிப்பது? ... அல்லது எதற்காக அழுவது?...

குழம்பிய மனத்தோடு வீட்டிற்கு வந்தேன். ஆயாவின் கலங்கிய மனத்தை என்னால் தேற்ற முடியவில்லை; ஆயாவின் கண்ணீரையும் என்னால் துடைக்க முடியவில்லையே!...ஊம்...

முத்து

இரக்கப்படுவது குற்றம்!...உங்களுக்கு வியப்பாக இருக்கலாம்!... "இரக்கம் காட்டுவதா குற்றம்?... பரிந்து பேசுவதா தவறு?"... என்று நீங்கள் கேட்பதும் தெரிகிறது.

ஏழைகளுக்காக இரக்கப்படுவது குற்றம்தான்! செல்வந்தரின் நாஅசைவில் ஆடும் இந்த உலகம், ஏழைகளுக்காகக் கண்ணீர் விடுவதும் குற்றம்தான். செல்வந்தரின் சொல்லுக்குச் செல்வாக்கு இருக்கும் வரையில், ஏழைகளுக்காக, செல்வாக்கு இல்லாதவர்கள் இரக்கப்படுவது குற்றமாகத்தான் முடிந்துவிட்டது.

காஞ்சிபுரத்து ஆயாவுக்காக இரக்கப்பட்டுப் பேசவந்த துளசி அம்மாவும் இந்தத் திருட்டுச்சொத்தில் சம்பந்தபட்டவள் என்று இந்த வீட்டுக்கார அம்மா புகார் கொடுத்திருக்கிறார்கள்...ஆயாவையும், துளசி அம்மாவையும் கைது செய்து போலீஸ் நிலையத்தில் காவல் வைத்திருக்கிறார்கள். விசாரணை நடக்காமலேயே தண்டனையும் விதிப்பார்கள் போல் இருக்கிறது!

திருட்டுப்போன நகையைப்பற்றி எனக்குத் தெரியும்.

காஞ்சிபுரத்து ஆயா குற்றம் அற்றவர்; துளசி அம்மாவும் குற்றம் அற்றவர். இருவரும் நிரபராதிகள்.

நகையைத் திருடியது அந்த வீட்டு ஐயாதான்!.

ஐயாவுக்கு வேண்டியவர்க்காக அந்த நகையைத் திருடினார்; அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார்!; தான் விரும்பியதைப் பெற்றுக் கொண்டார்!

ஐயாவின் திருடு அம்மாவிற்குத் தெரிந்தாலும் தெரியாது போல் நடிப்பது வழக்கம். ஐயாவின் திருடு வெளியே தெரிந்தால் யாருக்கு அவமானம்? ... இதை உணர்ந்த அந்த அம்மா வாளா இருந்தாள்.

* * *

அம்மாவும் குற்றவாளியே!. அம்மாவுக்கு "வேண்டியவர்"... அவர்தான் அந்த 'சோ'வுக்கு அன்பளிப்பாக அந்த நெகலசைக் கொடுத்துவிட்டார்!. பணத்தைக் கொடுத்து—நகையைக் கொடுத்து, அம்மா அந்த 'சோ'வின் நட்பைப் பெற்றார்.

அம்மாவின் திருட்டுத்தனத்தை ஐயாவிடமிருந்து மறைக்க,— அன்பளிப்பாக கொடுத்த உண்மையான வைர நெக்லசைப் போலவே, போலி வைர நெக்லசைச் செய்து வைத்துவிட்டார்.

ஐயா திருடியது உண்மையான வைர "நெக்லெஸ்" அல்ல; போலி வைரம் பதித்த "நெக்லெஸ்"!.

திருடர்கள் யார் என்பதை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்!. நானே போலீசில் சொல்லி இருக்கலாம்!. ஆயாவும், துளசி அம்மாவும் நிரபராதிகள் என்றும் கூறி இருக்கலாம். ஆனால் செல்வந்தர் வீட்டில் வாழ்கின்ற இந்தச் சுகமான வாழ்வை நான் இழந்தவள் ஆவேன். பழையபடி நடைப்பாதையில் குடியேற வேண்டியதுதான்; பட்டினியால் வாடி, வதங்கிச் சாகவேண்டியதுதான். அதற்கு அஞ்சியே உண்மை எது என்று தெரிந்தும்?...திருடர்கள் யார்? என்று அறிந்திருந்தும் வாய் பொத்தி வாளா இருந்தேன்.

ஐயாவுக்கு வேண்டியவரையும், அம்மாவுக்கு வேண்டியவரையும்,— இந்தச் சமூகக் கண்களிலிருந்து மறைக்க — அவர்களின் அன்பளிப்பைத் — திருட்டுக் குற்றமாக்கி ஆயாவின் தலையில் சுமத்தி விட்டார்கள்!

நீதிக்காகச் சட்டம்தோன்றியது! சட்டத்தை விலை கொடுத்து வாங்கித் தம்செல்வாக்குஓங்குவதற்காகச் செல்வந்தர்கள் தோன்றினார்கள்!!

செல்வம் வந்துவிட்டால் எதையும் செய்யலாம், எதையும் சொல்லலாம்போல் இருக்கிறது!. அவைகளுக்குத்தான் செல்வாக்குப் பிறக்கிறது.

பழி ஓரிடம்; பாதகம் ஓரிடம்! செல்வந்தர்கள் செய்த பழியை ஆயாவின் தலையிலும், துளசி அம்மா மீதும் சுமத்திவிட்டார்கள் நிரபராதிகளான அவர்கள் தண்டனையும் பெறுவார்கள். அதற்கு யார் காரணம்?.